1986 ஜூன்
விலை ரூபா: 5-00
சுவடு 8

தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின்
[NLFT]
அரசியல்,
தத்துவார்த்த,
விமர்சன ஏடு

# இலக்கு

"எதிரியை முற்றாக விரட்ட ஒரு பரந்துபட்ட ஆக்கிரமிப்பு எதிர்ப்பு ஐக்கிய முன்னணியைக் கட்டி எழுப்பவேண்டும். ஆனால் உள்நாட்டில் சமாதானமின்றி எப்படி ஒரு உண்மையான ஸ்திரமான சிறிலங்கா எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை கட்டியெழுப்பமுடியாதோ அவ்வாறே உள்நாட்டில் ஜனநாயகமின்றியும் அது சாத்தியமில்லை. எனவே ஜனநாயகத்திற்காகவும் சமாதானத்திற்காகவும் போராடுவதே தேச பக்தர்களின் மிக முக்கியமான கடமையாகும்."

"எதிரிக்கெதிராக உறுதியான விட்டுக்கொடுக்காத போரை நடாத்த உள்நாட்டில் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் பேணுவோம்!

"போராடும் மக்களதும், குழுக்களதும் ஜனநாயகத்தையும் அரசியலுரிமையையும் பேணுவோம்!

www.tamilarangam.net

www.tamilarangam.net

# இலக்கு

சுவடு - 8
ஜூன் 1986

இயக்கப்படுகொலைகளை நிறுத்துவோம்!
உள்நாட்டில் சமாதானத்தைப் பேணுவோம்!
எதிரிக்கெதிராக விட்டுக்கொடுக்காது போராடுவோம்!

எமது இலக்கு ஏழாவது இதழ் வெளியாகி ஓராண்டு காலம் கடந்து விட்டது. ஸ்தாபனத்துள் நிலவிய கருத்து முரண்பாடுகளினால் ஏற்பட்ட உட்கட்சிப் போராட்டங்கள் பத்திரிகையை வெளிக்கொணர்வதில் சில தடங்கல்களை ஏற்படுத்தி விட்டது.

எமது அமைப்புக்குள் ஏற்பட்ட உட்கட்சி விவாதங்கள் மிகவும் துரதிஸ்ட வசமான முறையில் பிரிவு என்ற ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது உண்மையே ஆயினும், இரு பிரிவினரும் தத்தமது அரசியல் கோட்பாடுகளினடிப்படையில் செயற்படவும் தொடர்ந்து ஐக்கியத்துடனும் புரிந்துணர்வுடனும் பரஸ்பரம் ஒவ்வொருவரது அரசியல் உரிமைகட்கு மதிப்பளித்து செயற்படுவதிலும் உறுதியுடன் உள்ளோம்.

மே முதல் வாரமளவில் வெளியிட எண்ணியிருந்த இந்த இதழ் எமது தேசத்தில் அண்மையில் நடந்து முடிந்த துர்ப்பாக்கியகரமான சம்பவங்கள் ஏற்படுத்திய அதிர்ச்சி காரணமாக காலந்தாழ்த்தி வரவேண்டி ஏற்பட்டுள்ளது. இந்த இதழ் முதல் 'இலக்கு' தொடர்ச்சியாக வெளிவருவதற்கு எம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என உறுதி கூறுகின்றோம்.

✠ ✠ ✠

எமது இலக்கு வெளிவராதிருந்த இந்த இடைக்காலத்தில்தான் எவ்வளவு சம்பவங்கள் நிகழ்ந்தேறிவிட்டன. தமிழீழ மக்களின் தலைவிதியினை தீர்மானிக்கின்ற வரலாற்றுக் கடமை தமது தலையிலேயே சுமத்தப்பட்டுள்ளதென்ற முடிவுடன் இந்திய இலங்கை அரசுகளும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் புதுப்புதுத்தீர்வுகள் பற்றி வாயளந்து வருகின்றன. ஒரு புறம் அரசியல் தீர்வு என்ற பசப்பலும், மறுபுறத்தில் வேட்டுக்களை மக்கள் மீது பொழிந்து தள்ளுவதுமாக அரச நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இயந்திரத் துப்பாக்கிகள் பூட்டிய ஹெலிகொப்டர்கள் தாழப்பறந்து தீயுமிழ்ந்து செல்கின்றன. பீரங்கிப் படகுகளிலிருந்து கரைநோக்கி குண்டுகள் பறந்து வருகின்றன. அடிக்கடி பீரங்கிக் குண்டுகள் மக்கள் கூடும் பஸ் நிலையங்களிலும், வீட்டு முற்றங்களிலும் வெடித்துச் சிதறுகின்றன.

பயபீதியும் மரண ஓலமுமாக கரையோர மக்களும் இராணுவமுகாம்களை சுற்றியுள்ள கிராமமக்களும் தமது பெட்டி படுக்கைகளுடன் மத்திய பகுதிகளை நோக்கி விரைகின்றனர், ஆயினும் என்ன? அங்கேயும் ஒரு



தமிழீழ தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குண்டு எங்கிருந்தாவது வீசப்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

இது போதாதென்று பலாலி விமான நிலையமும் விமானப்படைத் தளமாக்கப் படப் போவதாகவும் அதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிகிறது.

அமெரிக்காவினதும் அதன் சார்பு ஏகாதிபத்திய பிற்போக்காளர்களினதும் உதவிகள் போதாதென்று இப்போது சோவியத்தை நோக்கிச் செல்லவும் அரசு முடிவு எடுத்துள்ளது. இந்திய- சோவியத் நல்லுறவு இந்த விடுதலைப் போராட்டத்தை நசுக்க ஏதாவது வாய்ப்பைத் தராதா என்ற நப்பாசை போலும். பிசாசிடமும் உதவி கோரத் தயங்க மாட்டேன் என்ற ஜே. ஆரின் அரசு விடுதலைப் போராட்டத்தை நசுக்க எடுத்துவரும் நடவடிக்கைகள் சிலவே மேலே சொல்லப்பட்டவை. நாட்டை யார்; வேண்டுமானாலும் கொள்ளை அடிக்கலாம், அது நேட்டோ (NATO) என்றாலென்ன, வார்சோ (WARSAW) என்றால் என்ன எமது சுரண்டலுக்கும் இனஅழித்தொழிப்பிற்கும் வாய்ப்பு இருந்தால் போதும் என்பது இலங்கை ஆளும் கும்பலின் எண்ணம் பிலிப்பைன்ஸில், மாக்கோசின் ஓட்டம் இந்த ஆளுங் கும்பலுக்கு நடுக்கத்தையும், மாக்கோஸ் என்ற கயவனுக்கு சோவியத் கடைசி நேரத்தில் உதவ முன்வந்தது ஒரு 'ஆசையையும்' ஒருங்கே கொடுத்திருக்க வேண்டும்.

ஆனல், எல்லா நாடுகளிலும் புரட்சி, வளர்ந்து வந்த மாபெரும் எதிர்புரட்சி சக்திகளை முறியடித்தே முன்னேறி வெற்றி பெற்றிருக்கின்றது. வியட்நாமில் அமெரிக்கா குவிக்காத ஆயுதங்களா? குவிக்காத துருப்புகளா? ஆனல் இறுதி வெற்றியை அமெரிக்கா பெற்றுவிடவில்லை.

எந்த எதிர்ப்புரட்சியாளனும் வெற்றி பெறுவதில்லை. எப்போதும் மக்களே இறுதியில் வெற்றி பெறுவர் என்பதை எமக்கு வரலாறு காட்டுகிறது. ஆனல், எந்த பிற்போக்கு எதிர்ப்புரட்சியாளனும் தானுகவே இதையெல்லாம் புரிந்துகொள்வதில்லை மக்களிடம் மரண அடிவாங்கும் வரை அவர்களால் இவற்றை புரிந்து கொள்ள முடிவதில்லை.

ருஷ்ய சர்வாதிகாரி ஜார் முதல் பிலிப்பைன்ஸ் மார்க்கோஸ் வரை இதுதான் உண்மை என்பதை வரலாற்றின் பக்கங்களிலிருந்து நாம் படிக்கின்ருேம். ஜே. ஆரும் இலங்கை ஆளும் கும்பலும் இதற்கு விதிவிலக்காகிவிட முடியாது! எனவே எத்தகைய இடர்வரினும், 'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை என்ற நிமிர்ந்து நின்று போரிடும் உறுதியும், விட்டுக் கொடுக்காத போர்க் குணத்துடன் மக்களுக்கு நம்பிக்கை யூட்டி வழிநடாத்தும் ஆளுமையும் புரட்சியாளருக்கு அவசியம். ஆனல் இங்கு என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது?

இந்த இடைக்காலத்தில் யாழ்குடா நாட்டில் நடந்து முடிந்த சம்பவங்கள்தான் என்ன? இராணுவத்தின் படுகொலைகளை மிஞ்சும் விதத்தில் இயக்கப் போராளிகளிடையேயான உள்மோதல்கள் நடந்து முடிந்துள்ளன. விடுதலைப் போராளிகள் பலர் -- தேசத்தின் விடுதலையை மனப்பூர்வமாக நேசித்து அதற்காக தங்களை முற்ருக தியாகம் செய்யத் தயாராகி ஆயுதமேந்திய பலர் - படுகொலை செய்யப்பட்டனர். இதை எதிர்த்து எழுந்த மக்களது ஊர்வலம் துப்பாக்கி முனையில் அடக்கப்பட்டது விடுதலை இயக்கத்துக்குள்ளே எழுந்த முரண்பாடு, சக தோழர்களையே பகிரங்கமாக படுகொலை செய்யுமளவிற்கு மோசமடைந்தது. இந்த செயல்களில் அப்பாவி மக்களும் உயிர்ப்பலியாகிய சம்பவமும் நிகழ்ந்தது.

இந்த அதிர்ச்சியில் இருந்து மக்கள் முழுமையாக விடுபடு முன்னரே, கடந்த மே முதல்வாரத்தில் இன்னெரு அதிர்ச்சியூட்டும் நிகழ்ச்சி நடந்தேறியது. இயக்கங்களிடையேயான மோதல்கள் மிகவும் உச்சக் கட்டத்தை அடைந்தது. ஒரு விடுதலை இயக்கம் முழுமையாக அழித்தொழிக்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்ட துயர்படிந்த, எமது அரசியல் வரலாற்றின் கறைபடிந்த அத்தியாயங்கள் இந்த நாட்களில்தான் எழுதப்பட்டன.

ஸ்ரீலங்காவின் ஆளும் வர்க்கங்களினதும், அரசினதும் படைகள் ஆயிரக்கணக்கில் வடக்கு நோக்கிக் குவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தக் கட்டத்தில், அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், மற்றும் உலகப் பிற்போக்காளர்களதும் மனிதவதைக் கருவிகள் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவில் குவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில். கப்பல் கப்பலாக ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டு தமிழீழத்தை பொசுக்கிவிடும் நோக்குடன் குறிவைக்கப்பட்டுக் கொண்டிருக்கும், இந்தவேளையில் இப்படி ஒரு நிலையா என்று மக்கள் திகைக்கின்றனர்.

எதிர்க்கெதிராக போரிடக்கூடிய எந்த சக்தியையும், அவை எவ்வளவுதான் குறைபாடுகளை கொண்டிருந்த போதும் அவற்றை அழிப்பதை இப்போது மக்கள் விரும்பவில்லை. மக்கள் ஐக்கியத்தையே ஒன்றுபட்ட எதிர்ப்பையே விரும்புகிறார்கள்.

இத்தகைய நிகழ்ச்சிகள் எமது போராட்டத்தில் ஒரு அதிருப்தியையும் அவநம்பிக்கையையும் சோர்வையும் விளைவித்துவிடும் அபாயகரமானவை என்று இலக்கு முழுமையாக நம்புகின்றது. இது தொடர்பாக முன்னணிச் செய்தி பெப்ரவரி - 86 இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்ததை திரும்பவும் இங்கு சுட்டிக்காட்டுகிறோம்:

எனவே, அனைத்துவிடுதலை ஸ்தாபனங்களும் அவை உண்மையாக மக்களை, மக்களின் விடுதலையை நேசிப்பவையாக இருந்தால். அவை உண்மையாகவே தேசபக்தப் போராளிகளைக் கொண்டதாக இருந்தால், தேச விரோத, ஏகாதிபத்திய அடி வருடிகளிடம் இருந்து சுதந்திரமாக எமது தேசத்தை மீட்டெடுக்கும் தியாக வேள்வியில் குதிக்கும் மன உறுதியும் உற்சாகமும் உள்ள நேர்மையான விடுதலை இயக்கங்களாக இருந்தால், இயக்க முரண்பாடுகளுக்கு எதிராக துப்பாக்கி தூக்குவதை நிறுத்த வேண்டும். இயக்கத் தோழர்களைக் கொலை செய்வதை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். பொது எதிரியை நோக்கி துப்பாக்கிகளை திருப்பவேண்டும்.

ஆம்! தேசியவிடுதலையை உறுதியாக முன்னெடுக்க வேண்டுமானால், ஐக்கியப்பட்ட விட்டுக்கொடுக்காத போராட்டத்தை நடத்த வேண்டுமானால் போராளிகளிடையே சமாதானம் நிலவவேண்டும். உள்நாட்டில் சமாதானம் இல்லாதபோது உறுதியான போராட்டம் இருக்கமுடியாது.

எனவே, விடுதலை இயக்கங்களிடையே சமாதானமும் ஐக்கியமும் நிலவ வேண்டும். எதிரியை எதிர்த்து உறுதியாக போரிட உள்நாட்டில் சமாதானத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டும்!

இயக்கப்படுகொலைகளை நிறுத்துவோம்!

உள்நாட்டில் சமாதானத்தை பேணுவோம்! ✦

---

யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் அரச படைகளினதும், படைக்கலங்களினதும் பலமானது நாளும் பொழுதும் அதிகரிக்கப்படுகிறது. அடிக்கடி தெற்கிலிருந்து விமானங்கள் பறந்து வருகின்றன, பாரிய பொதிகளை இறக்கியபின் திரும்பிப் பறக்கின்றன. திரும்பவும் வருகின்றன. இவற்றைவிட நான்கு குண்டுவீச்சு விமானங்களும் மூன்று கடல் வேவு விமானங்களும் (Sea Planes) பலாலி விமான நிலையத்தில் தரித்து நிற்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சர்வாதிகாரி மார்க்கோஸ் தப்பியோட்டம்: பிலிப்பைன்ஸ் மக்களின் வெற்றியின் முதற்கட்டம்!

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் நடந்த படு மோசமான ஊழல்களை எதிர்த்தும், சர்வாதிகாரி மார்க்கோசை நாட்டைவிட்டு ஓடுமாறு கோரியும் பிலிப்பைன்ஸ் வீதிகளில் மக்கள் திரண்டனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சீராட்டில் செல்லப் பிள்ளையாக இருந்து சமீபகால வரலாற்றின் படுகொலை மன்னர்களில் ஒருவனாக விளங்கிய மார்க்கோஸ், தனது அதிகாரம், அந்தஸ்த்து பதவி அனைத்தையும் இழந்து நாட்டைவிட்டு தப்பி ஓடினார்! அமெரிக்க கொலைக்கருவிகளான டாங்கிகளும் இயந்திரத்துப்பாக்கிகளும், ஆயுதப்படையும் அவரை இந்த தப்பியோடலில் இருந்து பாதுகாக்க முடியவில்லை.

பிலிப்பைன்ஸ் பல தீவுக்கூட்டங்களைக் கொண்ட ஒரு நாடு. பொருளாதார இராணுவ கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இந்த நாடு அமெரிக்க ஏகாதிபத்திய வெறிநாய்களின் சுரண்டலுக்கும், இராணுவ அச்சுறுத்தலுக்கும் ஒரு முக்கியதளமாக பயன்பட்டு வருகிறது. அமெரிக்காவின் இரண்டாவது பெரிய இராணுவத்தளம் இங்கிருந்தே செயற்பட்டு வருகிறது பிலிப்பைன்சில் உள்ள அமெரிக்காவின் தொழிலகங்கள், உலகவங்கி, சர்வதேசநாணய நிதியம் (IMF) போன்றவற்றின் பொருளாதார தொள்ளையடிப்பின் கீழ் பிலிப்பைன்ஸ் மக்கள் பெரும் துன்பங்களையும் நெருக்கடிகளையும் எதிர்நோக்கி வருகின்றனர். இவற்றின் காரணமாக வெடித்துக்கிளம்பிய அவர்களது எதிர்ப்புப் போராட்டங்கள் அனைத்தும் ஆயுதமுனையில் அடக்கி ஒடுக்கப்பட்டன.

### மார்க்கோசின் அரசின் கீழ்

★ 750 க்கு மேற்பட்ட அரசியல் கைதிகள் தடுப்புக்காவலில் இடப்பட்டனர்.

★ 10 க்கும் மேற்பட்ட கத்தோலிக்க மத நிறுவனங்களை சேர்ந்த அரச எதிர்ப்பாளர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1979 வரை 23 பத்திரிகையாளரையும் 50 க்கும் மேற்பட்ட தொழிற்சங்கவாதிகளையும் படுகொலை செய்தான்.

★ 1985 வரை 340 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவற்றை விட புள்ளிவிபரம் தெரியாத பல்வேறு விதமான ஒடுக்குமுறைகள் நடந்துள்ளன. ஆனால் இவற்றின் மூலம் மக்களை அச்சுறுத்தி முற்றாக அடக்கிவிட முடியவில்லை. மக்கள், பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் கீழும் மற்றும் பல்வேறு இயக்கங்களின் கீழும் அணிதிரண்டு உறுதியாக எதிர்த்து வந்திருக்கின்றனர். பிலிப்பைன்சில் எழுந்துவந்த இந்த எதிர்ப்பை கண்டு கொண்ட அமெரிக்க அரசு, தனது தொழிற்சாலைகளையும் மற்றும் சுரண்டலையும் பாதுகாக்கும் நோக்குடன் ஜனநாயக முகத்திரையை உருவாக்கிக்கொள்ள ஒரு தேர்தலை வற்புறுத்தி வந்தது. எழுந்துவந்த எதிர்ப்புப் போரட்டம் அமெரிக்க மூலதனத்திற்கும், மற்றும் சுரண்டலுக்கும் எதிரானதாக இல்லாமல், அங்குள்ள முதலாளித்துவ அரசியல்வாதிகளும், அமெரிக்க அரசும் அவற்றை வெறும் மார்க்கோசுக்கு எதிரான போராட்டமாக திசைதிருப்புவதில் வெற்றி பெற்றனர். மக்களிடையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாக்கோசின் செல்வாக்கின் வீழ்ச்சியை கண்ட அமெரிக்கா, தன்னுடைய இன்னொரு அடிவருடியாக வரக்கூடிய திருமதி. அய்க்கினோவின்பக்கம் சாய்ந்துகொண்டு, தனக்கு நல்ல பெயரைத்தட்டிக்கொண்டது.

பிலிப்பைன்சில் எப்படியாவது நுழைந்து விடவழிபார்த்திருந்த சோவியத் சமூக ஏகாதிபத்தியம் அமெரிக்காவால் கைவிடப்பட்டு கையறு நிலைக்கு வந்துவிட்ட மாக்கோசிற்கு சாதகமாக பேசப்போய் இடம் தெரியாமல் காலைவிட்டவன் போல் அம்பலமாகிப் போனது. ஆயினும் அமெரிக்கா மார்க்கோசை பகிரங்கமாக எதிர்க்கத் தொடங்கியது, அமெரிக்காவிற்கு போட்டியாக சந்தைபிடிக்க புதிதாகப் புறப்பட்ட சோவியத்ரஷ்யாவுக்குபிலிப்பைன்சின்வளங்களையும் தளங்களையும் கைப்பற்றும் நப்பாசையை ஏற்படுத்திவிட்டது. மக்களின் ஜனநாயக உரிமைகளை இராணுவ பலத்தின் மூலம் நசுக்கிவந்த ஒரு பாசிச வெறியனை ஆதரித்ததன் மூலம் தானும் அந்தவகையை சேர்ந்தது என இனங்காட்டியுள்ளது, சோவியத் முன்பு எரித்திரிய விடுதலைப் போராளிகளின் முதுகில் குத்தியது முதல் ஆப்கானை ஆக்கிரமித்தது வரை இதுதெளிவாகிவிட்ட விசயம்தான். இப்போது இது இன்னுமொருதடவை உறுதிப்பட்டுள்ளது. ஆயினும் தனது நடவடிக்கை மூலம் தனது பாசிச முகமூடி வெளித்தெரிந்து விட்டதே என்ற பய உணர்வின் காரணமாக திடீரென மௌனமாகிவிட்டது.

பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் மாக்கோசின் சர்வாதிகார அரசையும் உறுதியாக எதிர்த்து வருகின்றது. இது நாட்டின் மூன்றிலொருபகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன் தேசிய ஜனநாயக முன்னணி (NDF) மூலம் பரந்தளவில் வெகுஜனங்களை அணிதிரட்டி வருகின்றது. புதிய மக்கள் இராணுவம் (NPA) என்ற பலமான இராணுவத்தை கொண்டிருக்கும் இக்கட்சி அமெரிக்க சோவியத் மேலாதிக்கங்களை உறுதியாக எதிர்ப்பதுடன் நாட்டில் மக்கள் ஜனநாயகத்தினை மலரச்செய்யும் தேசியவிடுதலைப் போராட்டத்தை ஆயுதமேந்திய மக்கள் யுத்தப்பாதையில் நடத்திவருகின்றது. புதியமக்கள் இராணுவம் 16000 நிரந்தர வீரர்களைக்கொண்ட படையையும் 10 ஆயிரம் தொண்டர் இராணுவத்தையும் கொண்ட ஒரு பெரிய சக்தியாக உள்ளது.

அய்க்கினோ அரசு மாக்கோசிற்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்கள் மத்தியில் ஜனநாயகக் குரல் எழுப்பியதன் மூலம் ஆதரவு பெற்று உருவாகியுள்ளது. ஆனால் பிலிப்பைன்சின் அடிப்படைப்பிரச்சனையான உலகவங்கி IMF அமெரிக்க ஆலைகள் போன்றவற்றின் அளவுகடந்த கொள்ளையை நிறுத்தவோ, நிலப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரவோ இந்த அரசினால் முடியாது ஆனால் இவை தீர்க்கப்படாதவரை அய்க்கினோ மீதான வெகுஜன அபிப்பிராயம் அதிகநாள் நீடிக்கப் போவதில்லை; விரைவில் மக்கள் தமது பிரச்சனைகள் தீர்க்கப் படவில்லை என்பதைப்புரிந்து கொள்வர். ஜனநாயக குரலெழுப்பி பதவிக்குவந்த அக்கினோ அமெரிக்காவின் கையாளே என்பதையும் பாசிச நடைமுறை இன்றி அவராலும் அதிகாரத்தை நீண்டநாள் பேண முடியாதென்பதையும் மக்கள் விரைவில் தெரிந்து கொள்வர். சர்வாதிகாரி மார்க்கோசை விரட்டிய அவர்களது முதல்கட்ட வெற்றியை பிலிப்பையின்ஸ் தேசியவிடுதலை வரை அவர்கள் இட்டுச் செல்வர்!

அய்க்கினோ அரசு தான் குறிப்பிட்ட ஜனநாயக அமைப்பு வடிவங்களை நடைமுறைப்படுத்தவும், உள்நாட்டில் சமாதானத்தை நிலைபெறச் செய்யவும் பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒப்பந்தம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட்கட்சி வைத்துள்ள நிபந்தனைகளில் ஒன்றான அனைத்துமட்டங்களிலும் மக்கள் அரசுக்கான அடிப்படைகளை (Peoples Power Unit) உருவாக்கலை தவிர்க்க முடியாது. இவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இது கம்யூனிஸ்ட்கட்சி தன்னை மேலும் ஸ்திரப்படுத்திக் கொள்ளவும் அய்க்கினோ

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**விடுதலைப் போராளிகளுக்கோர் அறைகூவல் !**

# உள்நாட்டில் சமாதானமும் ஜனநாயகமும் ஓங்கட்டும் ! எதிரிக்கெதிரான ஐக்கியம் வளரட்டும் !

1. இன்று எமது தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு பிரதானமான கட்டத்தை அடைந்துள்ளது. 1983 யூலை கலவரத்தை அடுத்து எழுந்து வந்த உற்சாகமும் நம்பிக்கையும், ஆயுதப் போராட்டத்தில் இருந்த ஆர்வமும் இன்று ஒப்பீட்டளவில் மங்கிவருவதை நாம் காண்கிறோம். குறிப்பாக குட்டிபூர்ஷ்வா இளைஞர்கள் மத்தியில் தோல்வி வாதமும், உறுதியின்மை, ஊசலாட்டம் என்பன வளர்ந்து வருவதையும் காணக்கூடியதாக உள்ளது. பரந்துபட்ட மக்களை தட்டி எழுப்பாமையும், எமது போராட்டம் ஆயுதம் ஏந்திய மக்கள் போராட்டமாக விஸ்தரிக்கப்படாமையும், தொழிலாள விவசாயிகளின் தலைமைத்துவம் கட்டியெழுப்பப்படாமையும், பெரிதும் குட்டிபூர்ஷ்வா சமூக அடிப்படையையே எங்களது போராட்டம் கொண்டிருந்ததுமே இத்தகைய நிலமைக்கு அடிப்படைக் காரணங்களாகும்.

2. இத்தகைய ஒரு நிலமை அனுமதிக்கப்படக்கூடாதது. உடனடியாக களைந்தெறியப்பட வேண்டியது. உறுதியின்மை, ஊசலாட்டம், அரைமனத்தன்மை என்பன விடுதலைப் போராட்டத்திற்கு ஆபத்தான நோய்க்கிருமிகள். இவற்றிலிருந்து எமது போராட்டத்தை பாதுகாக்கவும் போராட்டத்தை விட்டுக் கொடுக்காது உறுதியுடன் முன்னெடுத்துச் செல்லவும் அடிப்படையான சிலகடமைகள் உள்ளன. தேசத்தின் விடுதலையையும், சுதந்திரத்தையும், தமிழீழ மக்கள் ஜனநாயக குடியரசையும் அமைப்பதில் தீராத வேட்கையும் கொண்ட அனைத்து தேசபக்த சக்திகளினதும் கையில் இந்த கடமைகள் உள்ளன. இதை நடைமுறைப்படுத்த முதலில் எமது நிலமைகளை நாம் ஆராயவேண்டும்.

3. எமது போராட்டம் இரண்டு கூறுகளைக் கொண்டது. ஒன்று ஸ்ரீ லங்கா அரசின் ஆக்கிரமிப்பு இராணுவத்தை எமது தேசத்திலிருந்து விரட்டி அடிப்பது. மற்றது தேசத்தின் மக்கள் ஜனநாயக அரசமைப்பை உருவாக்குவது.

இந்த இரண்டில் எந்த ஒரு பகுதியையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரித்துப்பார்க்க முடியாது. இங்கு நிலைகொண்டுள்ள படைகளை விரட்டி அடிப்பது எமது தேசத்தின் சுதந்திரத்திற்கு எவ்வளவு முக்கியமோ அதேயளவு முக்கியம் தான் அதை பாதுகாப்பதற்காக மக்கள் அரசை உருவாக்கி ஸ்திரப்படுத்தலுமாகும். ஸ்ரீலங்கா இராணுவத்தை இங்கிருந்து அகற்றுவதை மட்டுமே நோக்கமாக கொண்ட, அரசு வடிவங்களைப் பற்றி அக்கறைப் படாத போக்கு ஆட்சியதிகாரத்தை திரும்பவும் தமிழீழ பெரும் பூர்ஷ்வா நிலவுடமை வர்க்கங்களுக்கும் மற்றும் ஏகாதிபத்திய சுரண்டலாளருக்கும் வழங்குவதற்கே துணைபோகும் இத்தகைய ஒரு அரசு ஒருபோதும் மக்கள் அரசாக இருக்க முடியாது. மக்கள் அரசு, மக்களது அதிகாரம் என்பது தேசத்தின் அனைத்து மட்டங்களிலும் அவர்களது அதிகாரத்தை நிறுவவும் தொழிலாள விவசாயிகளின் மற்றும் குட்டிபூர்ஷ்வா, தேசிய பூர்ஷ்வாவர்க்கங்களின் கூட்டு ஜனநாயக சர்வாதிகாரத்தை தொடரவும் வாய்ப்பாக அமைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கப்பட வேண்டும் அரசியல் பொருளாதார இராணுவம் மற்றும் பண்பாட்டம்சங்களில் மக்களது அதிகாரத்தை உயர்த்தும் விதத்தில் இவை அமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் சுதந்திரம் என்பதும் ஜனநாயகம் என்பதும் அர்த்தமுள்ளவையாகும்.

4. இந்த இரண்டு பகுதிகளையும் சரிவரவும் உறுதியாகவும் நிறைவேற்ற, முன் நிபந்தனையாக இரண்டு பிரதான அம்சங்களுள்ளன. இவையே ஜனநாயகமும் சமாதானமுமாகும். இவை மக்களிடையே மக்களின் போராட்டக்குழுக்களுக்கிடையே நிலவ வேண்டும். இவை இரண்டும் உள்நாட்டில் நிலவாதவரை, ஸ்ரீ லங்கா இராணுவத்தை எதிர்த்து உறுதியான போராட்டத்தை நடத்தமுடியாது. எதிரியை முற்றாக விரட்ட பரந்துபட்ட ஆக்கிரமிப்பு எதிர்ப்பு ஐக்கியமுன்னணியை கட்டி எழுப்ப வேண்டும். ஆனால் உள்நாட்டு சமாதானமின்றி எப்படி ஒரு உண்மையான, ஸ்திரமான ஸ்ரீலங்கா எதிர்ப்பு ஐக்கிய முன்னணியை கட்டி எழுப்ப முடியாதோ அவ்வாறே உள்நாட்டு ஜனநாயகமின்றியும் அது சாத்தியமேயில்லை. எனவே தற்போது ஜனநாயகத்திற்காவும், சமாதானத்திற்காகவும் போராடுவதே, தேச பக்தர்களின் மேற்கூறிய வெற்றிகளை அடைவதற்கான மிக முக்கிய கடமையாகும். சமாதானத்தினதும், ஜனநாயகத்தினதும் முக்கியத்துவத்தை காணத்தவறி அதற்காக போராடத் தவறுவோமாயின் நாம் உண்மையான ஸ்ரீலங்கா எதிர்ப்பு ஐக்கிய முன்னணியைக் கட்டி எழுப்ப முடியாது.

இங்கு கட்டப்பட்ட E. N L. F இன் தோல்விக்கும் பிரதானமான காரணம் இதுவேயாகும்.

எமது ஆயுத எதிர்ப்புக்கு உள்நாட்டில் சமாதானமும் ஐக்கியமும் தேவைப்படுகிறது. ஆனால் ஜனநாயகமும் சுதந்திரமும் இன்றி ஏற்கெனவே வென்றெடுக்கப்பட்ட சமாதானம் ஸ்திரப்படுத்தப்படவும் உள் ஐக்கியம் பலப்படுத்தப்படவும் முடியாது. ஆயுத எதிர்ப்பிற்கு மக்களை அணிதிரட்டுவது தேவைப்படுகிறது. ஆனால் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் தவிர அவர்களை அணிதிரட்டுவதற்கு வேறு வழியே இல்லை. சமாதானமும் ஐக்கியமும் ஸ்திரப்படுத்தப்படாவிட்டால், மக்கள் அணிதிரட்டப்படாவிட்டால் எமது ஆயுத எதிர்ப்பு தோல்வியையே தழுவும்.

5. இத்தகைய ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் எவ்வாறு கட்டி எழுப்புவது? இதை நடைமுறையில் செயற்படுத்துவது எவ்வாறு விடுதலை இயக்கங்களுக்கிடையே இவற்றை ஏற்றுக்கொள்கிற கூட்டு எப்படி எந்தெந்த நிபந்தனைகளை உள்ளடக்கி அமைய முடியும்?

இவற்றுக்கான பதில் மிகவும் இலகுவானது. மூன்று பிரதான அம்சங்களில் ஐக்கியம் ஏற்படுவது எமது போராட்டத்திற்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். இவற்றை நடைமுறைப்படுத்துவது மக்களுக்
(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

## சர்வாதிகாரி மார்க்கோஸ் . . .

( 5-ம் பக்கத் தொடர்ச்சி )

அரசு மக்கள் முன்னால் அம்பலமாகி போவதற்குமே வழிவகுக்கும். ஏனென்றால் அக்கினோ உருவாக்கியுள்ள அமெரிக்கசார்பு அரசினால் ஒருபோதும் மக்கள் அரசுவடிவங்களை நடைமுறைப்படுத்த முடியாது.

பிலிப்பைன்சின் தேசிய விடுதலைப்போராட்டம் வெற்றி பெறுவதும் அமெரிக்கா வெகுவிரைவில் இன்னொரு வியட்னாமை அங்கு தரிசிக்கப்போவதும் உறுதியாகி வருகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒழிக!

பிலிப்பைன்ஸ் மக்கள் போராட்டம் வெல்க!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சீநோரில் நடந்த போராட்டம்:

## ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற முடியுமென்றதற்கு முன்னுதாரணம்!

யாழ்ப்பாணம் சீநோர் நிறுவனமானது, அண்மையில் நடத்திய போராட்டத்தின் மூலம் தொழிலாளி வர்க்கத்தால் அதிகாரி வர்க்கத்தின் அடக்கு முறைக்கெதிராகப் போராட முடியுமென்பதையும், இன்னும் ஒருபடி மேலே சென்று தொழிலாளிவர்க்கத்தால் தொழிற்சாலைகளை கண்காணித்து நடத்த முடியுமென்பதையும் மீண்டும் நிரூபித்துள்ளது. தொழிலாளிவர்க்கம், ஆளும் வர்க்கங்களின் கீழ் தொடர்ந்தும் ஆளப்படும் வர்க்கமாக தான் இருக்கமுடியுமென்ற பிற்போக்குக் கருத்தை உடைத்தெறிந்துள்ளது.

ஸ்ரீலங்கா–நோர்வே தரகுக் கும்பலின் கூட்டுநிறுவனமான சீநோர் தொழிற்சாலையில் அங்குள்ள பொதுமுகாமையாளரின் அதிகாரிவர்க்கப் போக்கையும், அவ்வர்க்கத்தின் இயல்பான குணாம்சமான கொள்ளை இலாபம், பதுக்கல், பொருட்கொள்ளை என்பவற்றையும் கண்டித்து, முகாமையாளரைத் தொழிற்சாலைக்குள் அனுமதிக்காது தொழிலாளர் மறியல் போராட்டத்தை நடத்தினர். தொழிற்சாலைக்குள் தொழிலாளரின் மறியலையும் மீறி உட்புகுந்த முகாமையாளர் தொழிலாளரால் இழுத்து வெளியில் கொண்டு வரப்பட்டார். தொழிலாளிவர்க்கத்தின் விடாப்பிடியான போராட்டம் காரணமாகத் தோல்வியைத் தழுவிக் கொண்ட முகாமையாளர் தொழிற்சாலையை விட்டு வெளியேறி தொழிற்சாலைக்குச் சொந்தமான தனது காரில் ஏறிச் சென்று விட்டான் அடுத்துத் தொழிலாளர் தமது கண்காணிப்பின் கீழ் ஏறக் குறைய ஒரு மாதகாலமாக தொழிற்சாலையைப் பொறுப்பேற்று நூல் உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருட் கொள்வனவு, வலை விற்பனை, நூல் விற்பனை என்பவற்றையும் தொழிலாளருக்கான சம்பளம் போன்றவை அனைத்தையுமே நடத்தினர்.

**சீநோர் தொழிற்சாலையில் முகாமையாளரின் அடாவடித் தனங்களில் சிலவற்றைக் கூறலாம்.**

1. காரைநகர் தொழிற்சாலையில் சம்பள உயர்வு, லீவு நாட்கள், மற்றும் தொழிலாளரின் ஜனநாயக உரிமை மீறல்கள் சம்பந்தமாகக் குரல் கொடுத்த ஐந்து தொழிலாளர்கள் மறுநாளே கொழும்புக்கு வேலை மாற்றம் செய்யப்பட்டனர். அரச பயங்கரவாதம் காரணமாக கொழும்பு செல்வதற்கு மறுத்த தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு வீதிக்கு விரட்டப்பட்டனர்.

2. சீநோரில் தொடர்ச்சியாகக் கொள்ளை அடிக்கப்பட்டது தெரிந்ததே. இவ்வாறுகக் கொள்ளை போன பொருட்களுக்கு அதிகப்படியான கணக்குக் காட்டி மிகுதிப்பணத்தைத் தான் தனது சொந்தத் தேவைக்காக பயன்படுத்தினர்.

3. தொழிற்சாலையில் தொடர்ந்து நடந்த கொள்ளையின் சூத்திரதாரி இவர் தான் என்பது தொழிலாளரால் கண்டு பிடிக்கப்பட்டது.

4. தொழிற்சாலையில் எவ்வித வேலையும் செய்யாத இப் பொதுமுகாமையாளருக்கு சம்பளம் 17,000 ரூபாவாகும். இது தொழிலாளரின் சம்பளத்தில் ஏழு மடங்கு அதிகரிப்பாகும். இவரின் பிள்ளைகள் பாடசா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லேக்குப் போவது மனையியல் கலேக்கழகம் செல்வது இதர சொந்தக் காருக்கான செலவுகள் யாவும் தொழிலாளரின் உழைப்பில் இருந்தே கொள்ளே அடிக்கின்ருன்.

5. தொழிலாளரின் சம்பளத்தை தீர்மானிப்பதும் தொழிலாளரின் நிரந்தர வேலேயைத் தீர்மானிப்பதும், இவரின் கைகளில் தான் அடங்கியுள்ளது என்ற வகையில் தொழிலாளரின் சம்பளத்தைக் குறைப்பதும் அதிகரிப்பதும் இவர்தான். இதன் மூலம் தொழிலாளரிடையே ஐக்கியத்தைச் சீர்குலேக்கவும் அவர்களேப் பிளவுபடுத்தி போராட்டத்தில் இருந்து தப்பிவிடவும் முடியும் இவ் மறியல் போராட்டத்தின் போது அதிகாரியின் ஒடுக்குமுறைக் கெதிராகக் கையொப்பம் வைக்காத தொழிலாளர்கள் நிரந்தர வேலேயைப் பெற்று சம்பள உயர்வு பெற்றுள்ளனர்.

6. அரசினுல் பெண்களுக்கான பிரசவ கால லீவு மூன்று மாதங்கள் என அறிவிக்கப்பட்ட பொழுதும் தனக்குச் சட்டக் கோவை கிடைக்கவில்லே எனப் பம்மாத்தடித்து ஸ்ரீலங்கா பாஸிஸ அரசினுல் வழங்கப்படும் ஆகக் குறைந்த தொழிலாளர் ஜனநாயக உரிமைகளேக் கூட வழங்க மறுத்து அவ்வளவு காலமும் வேலே செய்த பெண்களின் சம்பளப்பணத்தைச் சுருட்டிக் கொண்டார்.

7. நிர்வாகத்திற்கும் தனக்கும் இடையில் பிணக்குகள் வராமல் இருப்பதற்காகத் தமது உறவினர்கள் அனேவரையும் அலுவலகப் பணியில் ஈடுபடுத்தினுன்.

8. தனது உறவினர்கள் நண்பர்களிடம் இருந்து பொருட்களுக்கான அரைவாசிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு முழுப் பணமும் பெற்றுக் கொண்டதாகக் காட்டிவிட்டுக் குறைந்த விலேயில் பொருட்களே விற்பனே செய்தார்.

9. தொழிலாளர்கள், கடற்றொழில் செய்வோர் ஆகியோர் வலேக்கும் நூலுக்கும், கயிறுகளுக்கும் காத்துக்கிடக்க தனது உறவினர் நண்பர்கள் பெரும் பணமுதலேகள் ஆகியோருக்கு விற்பனே செய்தார்.

இத் தொழிற்சாலேயிலும் எல்லாத் தொழிற்சாலேகளிலும் உள்ளது போலவே பிற்போக்கு சமரசவாத யூனியன் ஒன்று உள்ளது. இதுபெரும்பாலும் அங்குள்ள குட்டி அதிகாரிகளேயும், சிலதொழிலாளர்களேயும் உள்ளடக்கி உள்ளது. இது மனேஜரைத் தொழிற்சாலேயில் இருந்து வெளியேற்றுவதற்கு மட்டும்தான் அனுமதித்தது ஆனுல் தொழிலாளர் தொடர்ந்தும் நிர்வாகத்தைக் கையில் வைத்திருப்பதற்கு அனுமதிக்கவில்லே ஏனெனில் இந்தநடவடிக்கையானது ஆளும்வர்க்கங்களின் அடிப்படை நலனுக்கு விரோதமாகச் செல்லக்கூடியது எனவே ஆளும்வர்க்கங்களின் கைக்கூலிகளான இவ் யூனியனின் நிர்வாகிகள்தமக்கு அந்தப்பதவி கிடைக்காதா என்ற நாய்ச் சண்டையில் உடனடியாகவே நமது எஜமானர்களிடம் முறையிடுவதற்காக ஒரிரு தொழிலாளர்களேயும் அழைத்துக் கொண்டு தமதுகுத்தொழிலாளர் மீதுள்ள அக்கறையின் காரணமாகக்' கொழும்புக்குச் சென்றனர். இவர்களின் ஏக்கமெல்லாம் தமக்கு சுரண்டலில்பாதி தரக்கூடிய பிரச்சனேயில்லாத அதிகாரியைக் கொண்டுவருவது. அல்லது தம்மில் ஒருவர் அந்த இடத்தில் அமர்வது என்பதே ஆனுல் பொதுமுகாமையாளர் மீது எஜமானுக்குள்ள ஆழ்ந்த விசுவாசம் காரணமாகவும், தொழிலாளரின் கோரிக்கைக்கு, (அடிமைகளின் கோரிக்கைக்குத்) தலே சாய்ப்பதா என்ற அதிகாரிவர்க்க வெறி காரணமாகவும் மீண்டும் பழைய பொதுமுகாமையாளரே நியமிக்கப்பட்டார். சமரசத்திற்குச் சென்ற தூதுக் கோஷ்டியின் வேண்டுதலுக்குத் தாம் செவிசாய்ப்பவர் போல் காட்டிக்கொண்டு "இப்பொழுதெல்லாம் தமிழ்ப்பகுதிகளில் இருக்கும் தொழிற்சாலேகளே அரசாங்கம் மூடிவிடுவதற்குத் திட்டமிட்டு வருவதாகவும் இவ்வாறன போராட்டங்கள் நடந்தால் விரைவிலேயே மூடிவிடும் என்றும் தமக்குத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்ப்பகுதிகளில் உள்ள அக்கறையை விபரித்துப் போராட்டத்தைக் கைவிடும் படியும், முகாமையாளரைத் தொழிற் சாலைக்குள் அனுமதிக்கும்படியும், இல்லா விட்டால் தொழிற்சாலை மூடப்பட்டு விடு மென்றும் மிரட்டியுள்ளான். இதன் விளை வாக அச்சமடைந்த தொழிலாளர்கள் தமது போராட்டத்தைக்கைவிட்டு முகா மையாளரைத் திரும்பவும் அனுமதித்துள்ள னர். இப்பொழுது தொழிற்சாலைக்குள் புகுந்த முகாமையாளர் தொழிலாளர்களை யும் அங்குள்ள உதவி அதிகாரிகளையும் தாஜாபண்ணும் விதமாக சம்பள அதிகரிப் பும் இன்னும் பிற சில்லறைச் சலுகைகளை யும் வழங்குவதிலும் ஈடுபட்டுள்ளார்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் ரஷ்ய சமூக ஏகாதிபத்தியம் என்பன வளர்ந்துவரும் உலக மக்களின் போராட்டத்தைக் கண்டு அஞ்சுகின்றன அவர்களின் ஆயுதப் போராட் டங்களுக்கும், வெகுஜன எழுச்சிகளுக்கும் முகம் கொடுக்கமுடியாத நிலையில் ஏற் கனவே அம்பலமாகிவிட்ட தனது கொலை வெறி முகத்தை மறைக்கும் முகமாகவும் வளர்த்துவரும் அவர்களின் போராட்டத்தை மழுங்கடிக்கவும் உலக மக்களின்பால் நல்ல அபிப்பிராயத்தைப் பெற முயன்று வரு கின்றது. ஏகாதிபத்தியத்தினதும், உள்நாட் டுப்பிற்போக்கு ஆளும் வர்க்கங்களினதும் சரண்டல் காரணமாக வறுமையையும், பட் டினிச்சாவையும் எதிர் நோக்கியிருக்கும் மூம் மண்டல நாடுகளில் வாழும் மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் முகமாக உதவி என்ற பெயரில் தனது நாட்டில் கைவிடப் பட்ட இயந்திரங்களை இந்நாடுகளுக்கு இறக்குமதிசெய்து உதவி செய்பவன் போல் நடித்துக்கொண்டு உள்நாட்டில் உள்ள தனது ஏவல்நாய் ஏஜெண்டுகளின் உதவி யுடன் இங்கு வாழும் தொழிலாளரின் உழைப்பை சுரண்டிவருகின்றன. இவ்வாறு வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவழங்கல் கடற்தொழிலை அபிவிருத்தி செய்தல் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டதுதான் இச் சீநோர் நிறுவனமாகும். இந்நிறுவனத் தின்பெரும் பகுதி இலாபம் உள்நாட்டு அதிகாரிகள் சுரண்டிக்கொண்டதைத் தவிர நோர்வேக்கே அனுப்பப்படுகின்றன. இந்நிறு வனத்தை நிர்வகிக்கும் பொறுப்பைமட்டுமே உள்நாட்டுத் தரகுக்கும்பல் பொறுப்பேற் றுள்ளது. இது தவிர இவ் இயந்திரங்களில் ஏதாவது பழுதடைந்தாலோ அதுவும் நோர் வேயில் இருந்தே இறக்குமதி செய்யப்பட முடியும். இவ்வாறாக தொழிலாளரின் பெரும்பகுதி உழைப்பை வெளிநாட்டு உள் நாட்டுத்தரகுக் கும்பல் தின்று கொழுத்து ஏப்பம்விட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இங்கு வேலைசெய்யும் தொழிலாளர்கள் ஆகக்குறைந்த ஜனநாயக உரிமைகள் கூட அற்ற நிலையில் எந்நேரத்திலும தொழிற் சாலை மூடப்பட்டுவிடலாம அல்லது தமது வேலைபறிபோய்விடலாம என்ற அச்சத்து டன் வேலை செய்துகொண்டிருக்கின்றனர்.

தமிழீழத் தேசியவிடுதலைப் போராட்ட மானது ஏகாதிபத்தியங்களுக்கும் உள்நாட்டு நிலப்பிரபுவர்க்கம், தரகு அதிகாரவர்க முதலாளித்துவவர்க்கம் என்பவற்றிற்கு எதி ரானதாகும். இப் போராட்டமானது சரி யானதும், உண்மையானதும் வெற்றிக்கு இட்டுச் செல்லப்படவேண்டுமானால் தொழி லாளிவர்க்கம் தனது தலைமையின் கீழ் அனைத்துப்புரட்சிகர சக்திகளின், வர்க்கங் களின் ஐக்கிய முன்னணியின் அடிப்படை யில் ஆயுதமேந்திப் போராடவேண்டியதும உள்நாட்டு பிற்போக்குக் கும்பலின்கைகளில் இருக்கும் அரசியலதிகாரத்தை தனது கரங்களில் பறித்தெடுப்பதும் அவசியமாகும் தொழிலாளிவர்க்கம் இன்று நடை பெற்றுக் கொண்டிருக்கும் தேசிய விடுதலைப்போராட் டத்தில் ஏகாதிபத்திய நிறுவனங்கள், தொழிற்சாலைகள் என்பவற்றைப் பறித் தெடுத்து தனது தலைமையின் கீழ் நிர்வா கிப்பதும் அவசியமாகும் இவற்றைச்சாதிப் பதற்கு தொழிலாளிவர்க்கஸ்தாபனம் இல் லாமலும், தொழிலாளர்கள் ஐக்கியப்பட்டு ஆயுதமேந்திப் போராடாமலும் அதாவது தமக்கென சொந்தப்படையைக் கட்டிக் கொள்ளாமலும் முடியாது. சீநோர்த் தொழிலாளர்களின் இந்தப்போராட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோல்வியடைந்ததற்கும் பிற்போக்குவாத, சந்தர்ப்பவாத சமரசவாதப் பாதையைச் சென்றடைந்ததற்கும் காரணம் இப் போராட்டம் சரியான தொழிலாளிவர்க்கப் புரட்சிகரஸ்தாபனத்தால் வழிகாட்டப் படாதது மாத்திரமல்ல தொழிலாளிவர்க் கம் தானே ஆயுதபாணியாக மாற்றாததும் தனக்கென சொந்தப்படை இல்லாததும் தான்.

### சீநோர்த் தொழிலாளர்களே!

அதிகாரிகள் மாறுவதால் எவ்வித பிர யோசனமுமில்லை சுரண்டல் கொடுமையோ, கொள்ளை இலாபமோ, வாழ்வில் வறு மையோ குறையப்போவது இல்லை. தொழிற் சாலைகள் அனைத்தும் தொழிலாளருக்குச் சொந்தமாகமாறும் போதுதான் எமது வாழ்வில் வறுமை நீங்க முடியும் எனவே ஏகாதிபத்தியத்தினதும் ஸ்ரீலங்காத்தரகு முதலாளித்துவப் பிற்போக்குக்கு கும்பல்களி னதும் கூட்டு நிறுவனமான சீநோர்வலைத் தொழிற்சாலையை மீண்டும் பறிமுதல் செய் வதற்கான தயாரிப்பு வேலைகளில் இன்றே ஈடுபவோம் ஆயுதமேந்திநிற்கும் அதிகாரி வர்க்கத்தும்பலை முறியடிக்கநாமும் ஆயுத பணிகளாகுவோம். தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின்கீழ் வென்றெடுப் போம். ஆயுதமேந்திப் போராட இந்த மேநாளில் சபதமேற்போம். ★

---

## உள்நாட்டில் சமாதனமும்...

( 7-ம் பக்கத் தொடர்ச்சி )

கும், தேசத்தின் புரட்சிக்கும் ஆற்றும் மாபெரும் கடமையாகும்.

அவை மூன்றும் வருமாறு:-

### 1. உள்நாட்டில் சமாதானமும், எதிரிக்கெதிரான விட்டுக்கொடுக் காத யுத்தமும்:

உள்நாட்டில் போராடும் குழுக்களுட னும் மக்களுடனும் சமாதானத்தைப் பேணு வதும், எதிரிக்கெதிராக விட்டுக்கொடுக் காது போரிடுவதும் இதை ஸ்திரமாக தொடர்ந்து நடத்த மக்களை ஆயுதபாணி யாக்குவதில் தீவிரகவனம் செலுத்த வேண் டும்.

### 2. பரஸ்பர ஒத்துழைப்பும், உள் நாட்டில் ஜனநாயகமும்:

அனைத்து போராட்டக் குழுக் களுக்கும் அவற்றின் அரசியல் போராட்டத் திற்கும் மக்களுக்கும் ஜனநாயகத்தை வழங்குதலும் போராட்டக் குழுக்களிடையே ஐக்கியத்தை பேணலும். மக்கள் அரசு வடிவங்களை உருவாக்கலும் அவற்றைப் பாதுகாத்தலுமாகிய பணியில் இது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

### 3. தொழிலாள விவசாயிகளு டன் நல்லுறவு:

தேசபக்த அடிப்படை வர்க்கங்களும், போராட்டத்தில் பிரதான சக்திகளுமான தொழிலாள விவசாயிகளுடன் நல்லுறவு, அவர்களது போராட்டத்திற்கு ஆதரவு வழங்கலும், அவர்களது ஆயுதமேந்திய கிளர்ச்சிகளில் ஐக்கியப்படுதலும்.

இம்மூன்று இலகுவான விடயங்களையும் நாம் ஏற்றுக் கொள்வோமானால் மட்டுமே தேசவிடுதலைப் போராட்டத்தில் நாம் முன்னேறிச் செல்ல முடியும்.

6. எனவே இந்த அடிப்படையில், அனைத்து போராட்டக்குழுக்களையும் அறைகூவி அழைக்கின்றோம் உள்நாட்டில் யுத்தத்தை கைவிடுங்கள்; இயக்கங்களுக்கிடையில் மோதல்களை தவிருங்கள் மக்களிடையே சமாதானத்தை பேணுங்கள்; எதிரிக்கெதி ராக உறுதியாகப் போராட மக்களை ஆயுத பாணியாக்குங்கள்.

மக்கள் அரசு வடிவங்களை நிறுவவும் மக்கள் ஜனநாயக குடியரசை நோக்கி முன் னேறவும் உள்நாட்டில் சமாதானமும் ஐக் கியமும் ஓங்கட்டும்!



தமிழீழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நம்பிக்கை தரும் ஓவிய அரங்கேற்றம்!

1986 மே 30ம், 31ம் திகதிகளில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஓவிய அரங்கேற்றம் தமிழீழத்திற்கு ஒரு புதிய முயற்சி. அருந்ததி சபாநாதன், சுகுணா தம்பித்துரை, நிர்மலா கோபாலசாமி ஆகிய மூன்று இளம் பெண்களின் இந்த ஓவிய அரங்கேற்றம், தேசத்தின் விடுதலைப் போராட்டத்தோடொட்டி பல்வேறு கலை முயற்சிகளும் வளர்ச்சி பெறுவது போலவே, ஓவியக் கலையும் வளர்ச்சி பெறும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது.

மூன்று ஓவியர்களது ஓவியங்களையும் பார்த்ததில், நிறங்களை தேர்தல், அவற்றைக் கையாளல் போன்ற பல்வேறு ஓவிய நுணுக்க விசயங்களில் அவர்களது திறமை பளிச்சிடுவதை அவதானிக்கமுடிந்தது. ஓவியந் தீட்டுவதிலுங்கூட பல உத்திகளை ஓவியர்கள் கையாண்டுள்ளார்கள். வயதுக் குறைவும் மாணவப் பராயமும், பல்வேறு சமகால அரசியல் நிகழ்வையொட்டிய தீர்க்கமான அரசியல் கண்ணோட்டத்தைக் பெற்றுக்கொள்ளவும், நிகழ்ச்சிகளின் மனப்பதிவுகளை உணர்வுபூர்வமாக செரித்துக்கொண்டு ஆற்றலுடன் வெளிப்படுத்துவதற்கும் உரிய போதிய முதிர்ச்சியமை அவர்கள் இன்னமும் பெற்றுக்கொள்ளாமைக்கு காரணமாக இருக்க வேண்டும். நிச்சயமாக அத்தகையதொரு வளர்ச்சியினை அவர்கள் பெறுவார்கள் என்பதற்கான முத்திரைகள் ஆங்காங்கே தெரிகின்றன.

ஓவியம் என்பது வெறும் படப்பிடிப்பல்ல. காட்சிகளையும், சம்பவங்களையும் அப்படியே நிறந்தீட்டுவது ஓவியக்கலையின் பணியும் அல்ல. ஓவியனின் வாழ்க்கை நோக்கு கருத்துநிலை என்பவற்றின் அடியாக, சமூக நிகழ்ச்சிகள் அன்றாடக் காட்சிகள் என்பவை பற்றிய அவனது பார்வை, அனுபவம் என்பவற்றையே ஓவியன் தனது படைப்பில் வெளிக்காட்டுகிறான். அப்போது தான் எந்தக் கலைக்கும் ஒரு சமூகப் பெறுமானம் ஏற்படுகிறது. ஒரு கலைஞன் சமூகத்தின் மீது தான் கொண்டுள்ள அதிருப்தி, எதிர்ப்புணர்வு, மாறுதலைக்கோரும் வேகம், அல்லது ஒத்திசைவு போன்றவற்றை அவனது வாழ்க்கைநோக்கு, கருத்துநிலை என்பவற்றினடியாக தனது படைப்புக்களில் வெளிப்படுத்துகிறான்.

இவை அவனது பார்வைக்கேற்ப சமூகத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுதுகின்றது. சமூகத்தில் ஏதாவது ஒரு பாதிப்பை ஏற்படுத்தாது எந்தக் கலை வடிவமும் வெற்றி பெறுவதில்லை. ஏற்படுத்தும் பாதிப்பு என்பது கலைஞனின் கருத்து நிலையோடு சம்பந்தப்பட்டதாகும். இந்த இடத்தில்தான் வாழும் சமூகத்தின் தன்மைக்கேற்ப கலைஞனும் அவனது கலையும் முற்போக்குப் பாத்திரத்தை வகிக்கிறதா, அல்லவா என்று ஆராயப்படுகிறது. உதாரணமாக இளம் பெண் என்ற நிர்மலா கோபாலசாமியின் ஓவியம் ஒரு சராசரி யாழ்ப்பாணத்து இளம் பெண்ணை நம் கண்முன் நிறுத்துகிறது. கல்யாணம் ஒரு சந்தையாகிப் போனதால் அதற்காக ஏங்கி ஏங்கி ஒடுங்கிப்போகும் ஒரு வகை மாதிரி (typical) யாழ்ப்பாணத்துப் பெண்ணை நினைவூட்டும் இந்த ஓவியம், ஓவியரின் சமூகம் பற்றிய ஒரு விமர்சனமாக அமைந்துவிடுகிறது.

மூன்று ஓவியர்களிடமும் ஆங்காங்கே இந்தத் திறமைகள் வெளித் தெரிகின்றன. இவை மிகவும் நுணுக்கமாகவும், ஆழமாகவும் வளர்வதற்கு, மக்களோடும்' மக்களது அன்றாட வாழ்வுக்கான போராட்டங்களோடும் தங்களை இணைத்துக் கொள்வது எவ்வாறு எல்லா வகைக் கலைஞர்களுக்கும் அவசியமோ அவ்வாறே இந்த ஓவியர்களுக்கும்.

அவர்கள் அவ்வாறு வளர்வார்கள் என நம்புகிறோம்!

எமது வாழ்த்துக்கள்!

**கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே!**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியற் குறிப்புகள்

1

## தேவை ஐக்கியமே! போராட்டம் அல்ல!

ENLF கூட்டிலிருந்து வெளியேறுவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் ஸ்தாபனம் அறிவித்துள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மாதத்தின் முதல்வாரத்தில் நமது மண்ணில் நடைபெற்ற அதிர்ச்சியூட்டும் சம்பவங்கள் இந்த ENLF பற்றிய சந்தேகங்களை பலருக்கும் ஊட்டியிருக்கும். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழ விடுதலை இயக்கத்திற்கும் இடையிலான மோதல் உக்கிரமடைந்து கொண்டிருந்த வேளையில் இந்த ENLF பற்றி பலர் மத்தியிலும் ஒரு கேள்வி எழுந்து கொண்டிருந்தது உண்மையே. அது தான் 'இந்த ENLF என்ன செய்து கொண்டிருக்கிறது' என்பது. ENLF கூட்டில் அங்கம் வகிக்கும் இயக்கங்களிடையே மோதல் தொடங்கியது இதுவல்ல முதல்தடவை. இதற்கு முன்பே பலதடவைகளில் இதில் அங்கம் வகிக்கும் இயக்கங்களிடையே மோதல்கள் எழுந்த போதெல்லாம் இந்த ENLF சம்பந்தமாக இப்படிப்பட்ட கேள்விகள் எழுந்தன என்பது உண்மைதான். ஆனால் இந்தத்தடவை, முன்பு போல அல்லாது மோதல் மிகவும் உக்கிரமடைந்தது போலவே E.N.L.F பற்றிய நம்பிக்கையும் முழுமையாக அற்றுப் போகிற அளவுக்கு உக்கிரமுற்று விட்டது.

E.N.L.F தொடங்கிய காலத்தில் அது இதில் கூட்டு வகிக்கும் இயக்கங்களுக்கிடையிலே ஒரு ஐக்கியத்தையும் பரஸ்பரம் நல்லுறவையும், ஒன்றுபட்ட யுத்தத்தினை முன்னெடுப்பதற்கான வாய்ப்பினையும் நல்கும் என்ற எதிர்பார்ப்பு அனைத்து அரசியல் அவதானிகள் மத்தியிலும் நிலவியது ஆனால் தொடர்ந்த சம்பவங்கள் இதனை உறுதி செய்வதாக அமையவில்லை. மாறாக இந்த கூட்டு வெறும் போலியா என்ற சந்தேகத்தையே ஊட்டி வந்தது.

இப்போது மே மாதத்தின் முதல் வாரத்தில் இங்கு நடைபெற்ற இரத்தக் களரியில் E.N.L.F இல் அங்கம்வகித்த இயக்கங்களில் சம்பந்தப்பட்ட இயக்கங்கள் தவிர ஏனைய இயக்கங்கள் இரண்டும் உடனடியாக அதை நிறுத்தும் நடவடிக்கையில் ஈடுபடாது இருந்தமை இக்கூட்டினையிட்டு மேலும் ஐயத்தை ஊட்டியிருக்கிறது.

இப்போது விடுதலைப் புலிகள் வெளியேறுவதாக அறிவித்துள்ளது எந்தவித மான பரஸ்பர ஐக்கியமும் இல்லாத ஒரு கூட்டாகவே இது இருந்துள்ளது என்பதை தெளிவாக காட்டுகிறது. இத்தகைய ஒரு "வழுவழுத்த" உறவு நீண்ட நாளைக்கு நிலைக்க முடியாது என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணமாக அமைந்துள்ளது. ஆயினும் நாம் இப்படி சொல்லும் போது ஒரு ஐக்கிய முன்னணியின் தேவையை நிராகரிக்கின்ற கண்ணோட்டத்தில் இதைச் சொல்வதாக யாரும் கருதிவிடக்கூடாது. மாறாக அவை மேலும் அழுத்தமாக வலியுறுத்தி, ஒரு உண்மையான ஐக்கிய முன்னணியை கட்டி எழுப்புவதற்காக உறுதியாக போராட வேண்டும் என்பதை அழுத்தி தெரிவிக்கவே இதைச் சொல்கிறோம்.

உண்மையில் இங்கு நாம் முன்பு குறிப்பிட்டது போன்ற சம்பவம் ஒன்று நடந்து முடிந்திருப்பது மிகவும் வேதனை ஊட்டுகிற, மக்களுக்கும் சக விடுதலை இயக்கங்கட்டும் அதிருப்தி ஊட்டுகின்ற ஒரு துர்ப்பாக்கிய



தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மான நிலைமையாகும். எதிரி தன்னை வேகமாகப் பலப்படுத்திக் கொண்டுவரும் இச்சூழ்நிலையில் அனைத்து புரட்சிகர சக்திகளையும் ஐக்கியப்படுத்தி ஒன்றுபட்ட தாக்குதலைத் தொடுப்பதே இன்று பிரதானமான கடமையாக உள்ளது. இத்தகைய ஒரு நிலையில் போராடும் சக்திகளுக்கிடையே முரண்பாடுகள் மோதல்கள் என்பவை எவ்வளவுதான் மோசமானவையாக இருப்பினும் தவிர்க்கப்பட வேண்டியவையாகும்.

பிரதான எதிரிக்கெதிரான சக்திகளிடையே உள்ள ஐக்கியமின்மை என்பது எமது இலட்சியப்பயணத்திற்கான மாபெரும் தடையாகும். ஸ்ரீலங்கா இராணுவத்தை விரட்டவும் அதனிடத்தில் மக்கள் அதிகாரத்தை நிறுவவுமான எமது தேசிய விடுதலை யுத்தத்தில் இயலுமான அனைத்து சக்திகளையும் ஐக்கியப்படுத்த முயலவேண்டும் ஐக்கியத்திற்காக நாம் போராடுகையில் பரஸ்பரம் ஒவ்வொரு அரசியற் குழுக்களின் அரசியல் உரிமை, பேச்சுரிமை, உள்ளிட்ட சனநாயக உரிமைகளை அங்கீகரிக்காது விட்டால் அந்த ஐக்கியம் சாத்தியப்படாது ஐக்கியம் என்பது அனைத்து போராட்டக்குழுக்களும் ஒரே அமைப்பாக மாறுவதல்ல. முரண்பாடுகள் நிலவும் சமூகத்தில் அது சாத்தியமல்ல. எனவே ஐக்கியம் என்பது அனைத்து குழுக்களுக்கும் பொதுவான அம்சங்களில் ஒன்றுபடுவதே ஆகும். போராடுகின்ற முரண்படுகின்ற அனைத்துக் குழுக்களையும் அச்சுறுத்தி ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்த முயற்சித்தால், அது பெயரளவிலான ஐக்கியமாக்கக்கூட ஏற்படாது மேலும் பிளவுகட்கும் சீர்குலைவுகளுக்குமே இட்டுச் செல்லும்.

தமிழீழ விடுதலை இயக்கத்தைப் பொறுத்தவரை அது அராஜகத் தன்மைகள் கொண்ட, சொந்த மக்களின் மீது நம்பிக்கை வைப்பதைவிட அந்நிய சக்திகளிடம் அதிக நம்பிக்கை வைத்து செயற்பட்டது உண்மையே. இந்த இயக்கத்தின் நடவடிக்கைகளால் மற்றெல்லா இயக்கங்களை விடவும் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் நாம் என்றவகையில் இவர்களைப்பற்றி நாம் அதிகமாக அறிவோம். இந்த தமிழீழ விடுதலை இயக்கம் எம் மீது தொடர்ச்சியான அச்சுறுத்தலையும் தாக்குதலையும், அவதூறுகளையும் கட்டவிழ்த்து வந்துள்ளது. இயக்கங்கள் ஒன்றாக ஐக்கியப்படவேண்டும் என்ற மக்களது விருப்பத்தை தவறாக பிரச்சாரம் செய்து, நசுக்கி, மிரட்டி ஒன்றாக்கும் ஒரு துர்நோக்கத்தினை இவ்வியக்கம் கொண்டிருந்தது என்பது உண்மையே.

ஆயினும், அது அவர்களது பாதை. தேசத்தின் விடுதலையை உண்மையாக நேசிப்பவர்களது, தேசிய சுதந்திரத்தை உயர்த்திப் பிடிப்பவர்களது பாதை அதுவல்ல. எமது நாட்டில் இன்று தேவையானது ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு படைகளை விரட்டியடிக்கின்ற எமது ஒன்றுபட்ட யுத்தமே இந்த அடிப்படையில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் சக்தி கணிசமானது என்பதை நாம் மறுக்க முடியாது. இவ்வியக்கம், எதிரியுடனான யுத்தத்திற்கு பின் வாங்கி எதிரியுடன் சமரசம் செய்து கொண்டு, உள்நாட்டின் தேசபக்தர்களுக்கு எதிராக செயல்பட்டிருக்குமாயின் நிலைமை வேறு. ஆனால் ரெலோ இன்னும் அவ்வாறு இருக்கவில்லை. அது எதிரிக்கெதிராக போரிடுகின்ற முற்போக்கான அம்சத்தையும் உள்நாட்டில் மக்களுக்கு விரோதமாக மக்களின் போராடும் சக்திகளுக்கு விரோதமான பிற்போக்கு தன்மையையும் கொண்டிருந்தது. இத்தகைய ஒரு முரண்பாடான தன்மையை அது கொண்டிருந்தது. இதில் எந்த அம்சம் பிரதான வடிவம் எடுக்கிறது என்பதை பொறுத்து அது மக்களிடம் ஆதரவையோ, அல்லது எதிர்ப்பையோ சம்பாதித்திருக்கும்.

இந்த இயக்கத்தை அழித்து அதன் தலைவரையே கொலை செய்யுமளவிற்கு ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள முன் இத்தகைய ஒரு பகுப்பாய்வை அவசியம் செய்திருக்க வேண்டும். எதிரிக்கெதிரான யுத்தத்தில் உறுதியான ஐக்கியத்திற்காக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரெலோவை நோக்கி அறைகூவல் விடப்பட்டிருக்க வேண்டும். அப்போதுதான், ரெலோவில் இருந்திருக்கக் கூடிய ஜனநாயக சக்திகள் சிந்திக்கவும், ஒரு மக்கள் சார்பு அணி பலமடையவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால் இங்கு நடைபெற்றது அவ்வாறில்லை. இது என்றென்றைக்கும் முடிவில்லாத ஒரு பகைமைக்கு வழிவகுத்து விட்டுள்ளது. இது ஐக்கியத்திற்கு பதில் பிளவையே ஏற்படுத்தி உள்ளது. தமிழீழத்தில் போராடிக் கொண்டிருக்கும் மக்கள் மற்றும் இயக்கங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் பிரதானமானவை அல்ல. அவற்றை பிரதானப்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமானால் அது விடுதலைக்கும் துரோகம் நினைப்பதற்கு ஒப்பானதாகும்.

எனவே,

போராடும் மக்களினதும் அரசியல் குழுக்களினதும் ஜனநாயகத்தை மதிப்போம்

எதிரிக்கெதிரான ஸ்ரீலங்கா எதிர்ப்பு ஐக்கியமுன்னணி ஒன்றை கட்டி எழுப்புவதற்காக ஊக்கமுடன் உழைப்போம்.

## 2

## கலாச்சார சீரழிப்பை ஒழிப்போம்!

## புரட்சிப் பண்பாட்டைக் கட்டி எழுப்புவோம்!

அண்மைக் காலங்களில் தமிழீழப் பகுதிகளில் குறிப்பாக யாழ் குடா நாட்டுப்பகுதிகளில் பரவலாக மினி தியேட்டர்களும் ஒளி பரப்பு நிலையங்களும் முளைத்து வருகின்றன அமெரிக்க, ஆங்கில ஏகாதிபத்திய சீரழிவு கலாச்சாரக் குப்பைகளை இறக்கி ஜனரஞ்சகப்படுத்தும் கேவலமான பணம் பண்ணும் தொழில் இப்போது வேகமாகப் பரவிவருகிறது. இது மிகமோசமாக மக்கள் மத்தியில் சீரழிவைத் தொற்றவைக்கவும், மக்களை அவர்களது வாழ்விற்கான போராட்டங்கள், புரட்சிப்போராட்ட உணர்வுகள் என்பவற்றில் இருந்து திசை திருப்பி சீரழிக்கும் செயல்களைப் பரப்பி வருகிறது.

ஏகாதிபத்தியவாதிகளின் பொருளாதார, இராணுவ, அரசியல் அடிமைகொள்ளல் இப்போது பண்பாட்டு ரீதியாகவும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, கிராமங்கள் தோறும், மக்களது உணர்வுகளை மிகவும் மோசமாக மழுங்கடிக்கும் விதத்தில் டிஸ்கோடான்ஸ் நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்படுகின்றன. பாலியல் வக்கிரங்களையும், தனிமனித சாகச உணர்வுகளையும் பரப்பி மக்களின் புரட்சிகர உணர்வுகளை மழுங்கடிக்கும் வகையில் இந்த சீரழிவுக் குப்பைகள் செயற்பட்டு வருகின்றன.

இன்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் தினசரி பல ஒளிபரப்பு நிலையங்களின் ஒளிபரப்பை பார்க்க முடிகிறது. ஒவ்வொன்றிலும் ஒரு நாளைக்கு மூன்று திரைப்படங்கள் வீதம் காண்பிக்கப்படுகின்றன. இவை மக்களுக்கு சொல்லுவதுதான் என்ன? மக்களின் மனதில் பாலியல் வக்கிரங்களை பரப்புகின்றன, தனிமனித சாகச நடிப்பிக்கைகளை ஊட்டுகின்றன. வாழ்வின் பிரச்சனைகளில் இருந்து தப்பியோடும் மனோபாவத்தை – கனவு நிலையை ஊட்டுகின்றன. இரத்தமும் நெருப்பும் சூழவுள்ள நெருக்கடிகள் நிறைந்த யுத்த பூமியில், மக்களிடையே ஏற்படுத்தப்பட வேண்டிய புரட்சிகர உணர்வையும், போராட்ட உணர்வையும் சிதறஅடித்து கனவு நிலையை ஊட்டி சீரழிக்கின்றன.

கலை கலாச்சாரம் உள்ளிட்ட அனைத்துப் பண்பாட்டம்சங்களும், ஆதிக்கத்திலிருக்கும் வர்க்கத்தினதும் அதன் அரசினதும் இருப்பைப் பாதுகாக்கும் கருவிகளாக செயற்பட்டு வருகின்றன (மக்கள் அதிகாரம் நிலவும் சோசலிச சமூகத்தில் பண்பாட்டம்சங்கள் மக்கள் அதிகாரத்துக்கு சேவையாற்றும் முற்போக்கான பாத்திரத்தை வகிக்கின்றன.) ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அந்நிய சுரண்டலாளர்ளின் நலன் பேணும் தரகுக் கும்பலின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகாரம் நிலவுகின்ற இந்த சமூகத்தில், தமது சுரண்டலதிகாரத்தை தொடர்ந்து பேணவும் அதற்கு இசைவாக மக்களை வாழவைக்கவும் தக்கவிதத்தில் அதற்கேற்ற பண்பாட்டு அம்சங்களும் இந்த ஆளும் வர்க்கங்களால் இறக்குமதி செய்யப்படுகின்றன. கோடிக்கணக்கில் செலவுகள் செய்து மேல்நாட்டு கலை வடிவங்கள் என்ற பெயரிலும், கலாச்சாரப் பாலம், ஒருமைப்பாடு என்ற பெயரிலும் ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து பல்வேறு கீழ்த்தர கலாச்சாரக் குப்பைகளை இறக்குமதி செய்து அறிமுகப்படுத்துவதில் மூன்றும் உலக நாடுகளின் தரகுக் கும்பல்கள் போட்டி போட்டுக்கொண்டு முன்னுக்கு நிற்கின்றன. இவை உள்நாட்டில் தமது அதிகாரத்தையும் சுரண்டலையும் செவ்வனே செய்ய உதவும் என்ற நோக்கத்திலேயே இங்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. பிலிப்பைன்ஸ், இந்தியா, இலங்கை போன்ற அனைத்து நாடுகளிலும் இது நடைபெற்றுக் கொண்டு வருகிறது

ஏற்கனவே நிலவுகிற பிற்போக்கு நிலப்பிரபுத்துவ பண்பாட்டம்சங்களினது பிற்போக்குத்தனத்தின் மீது இயல்பாகவே அதிருப்தி கொண்டுள்ள மக்கள் மத்தியில் இத்தகைய ஏகாதிபத்திய சீரழிவு கலாச்சாரங்கள் மிகவும் இலகுவில் ஊடுருவி விடுகின்றன. நிலப்பிரபுத்துவ பிற்போக்குப் பண்பாட்டம்சங்களை தகர்த்தெறிந்து அதில் மக்கள் ஜனநாயக கலாச்சாரத்தை, புரட்சிப் பண்பாட்டை கட்டி எழுப்புகிற பணியினை நிறுவுகிற புரட்சிகர மக்கள் யுத்தம் பூரணமாக வளர்ச்சியுறாத இந்த இடைநிலையானது ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களது உள்ளூர் தரகுக்கும்பலுக்கும் மிகவும் வாய்ப்பாக அமைந்துள்ளது. எனவே அவர்கள் வேகமாக தமது கலாச்சார பண்பாட்டு அடிமைத்தனத்தை நிறுவும் முயற்சியில் தீவிரமாக முயன்று வருகின்றனர்.

தமிழீழத்தில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் அவல வாழ்வுக்கும் யுத்த முனையில் உயிரைக் கையில் பிடித்தபடி வாழ்வுக்காக அவர்கள் நடாத்துகின்ற உரிமைப் போருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லாத தென்னிந்திய சீரழிவுத் திரைப்படங்கள் ஹொலிவூட் திரைப்படங்கள், மற்றும் அமெரிக்க வெறியூட்டும் இசைகள், நடனங்கள் நிறைந்த திகில் படங்கள் இங்கு மினித்தியேட்டர்களில் காட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மக்களது வாழ்வின் யதார்த்தத்தையும், அவர்களது தேவையையும், விளக்கவும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் புரட்சியுத்தத்தில் அவர்களை ஊக்கமுடன் ஈடுபடுத்தவும் உழைக்க வேண்டிய இன்றைய பண்பாட்டுத்துறை அம்சங்கள் இன்னும் வளர்க்கப்படாமலே உள்ளன. பிற்போக்குக்கு (அது நிலப்பிரபுத்துவ பழைமைவாத பிற்போக்காயின் என்ன அல்லது ஏகாதிபத்திய சீரழிவுப் பிற்போக்காயின் என்ன) சேவை செய்யும் அனைத்து கலைகலாச்சார பண்பாட்டு அம்சங்களை எதிர்த்து போரிடாமல் புரட்சிகர பண்பாட்டை கட்டிஎழுப்ப முடியாது. ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ சிறு கும்பலாதிக்கத்திற்கு சேவை செய்யும் பிற்போக்கு, பண்பாட்டம்சங்களை தூக்கியெறியவும், மக்கள் ஆதிக்கத்திற்கு சேவை செய்யும் புரட்சிப் பண்பாட்டை கட்டி எழுப்பவும்வேண்டிய அவசியமான பணி இன்று அனைத்துப் புரட்சியாளர்கள் மற்றும் தேசபத்தர்களது கைகளில் உள்ளது.

எனவே கலைஞர்களே! எழுத்தாளர்களே! புத்திஜீவிகளே! அனைத்துப பிற்போக்கு பண்பாட்டையும் எதிர்த்துப் போர்க்குரல் எழுப்புங்கள். புரட்சிகர மக்கள் யுத்தத்திற்கும் மக்கள் அதிகாரத்திற்கும் சேவையாற்றும் மக்கள் ஜனநாயக கலாச்சாரத்தினை, புரட்சிப் பண்பாட்டினை கட்டிஎழுப்ப ஒன்றுசேருங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 3

### மக்களை நோக்கி...

வீடுகளில் கொள்ளை அடிப்பது, தனிப்பட்ட முதலாளிகளிடம் பணம் பறிப்பது போன்ற விசயங்கள் எமது தேசத்தில் இப்போது மிகச் சாதாரணமாக நடந்து வருகின்றன. வீட்டுக்கொள்ளை பற்றியோ, கடத்திச் சென்றவர்களைத் திரும்பத் தருமாறு கோரும் உருக்கமான வேண்டுகோள் பற்றியோ செய்திவராத நாளிதழ்களை காண முடியாதளவிற்கு இந்த நிலைமை மிக அதிகரித்துள்ளது.

இப்பிரச்சனைகளுக்கெல்லாம் காரணம் இராணுவம் தான் என்று ஒரு முட்டாள் மட்டுமே ஒருவேளை சொல்லலாம். ஆனால் இவை ஆயுதம் ஏந்திய இளைஞர் குழுக்களாலேயே தொடர்ந்தும் நடத்தப்படுகின்றன, இது ஊரறிந்த இரகசியம். இத்தகைய செயல்கள் உண்மையில் விடுதலைப்போராட்டத்திற்கு அவசியமான, மிகச்சரியான நடவடிக்கைகள்தான் என்றால், அவை எதற்காக இவ்வளவு இரகசியமாக செய்யப்படுகின்றன? இச்செயல்கள் பெயர் கூறாமல் இரகசியமாக செய்யப்படுவதிலிருந்தே இதைச் செய்பவர்கள் இப்படியான நடைமுறைகளை விரும்பவில்லை என்று அல்லது இவர்கள் இப்படிச் செய்கிறார்கள் என்ற பெயர்வருவதை விரும்பவில்லை என்பது தெளிவாகிறது அப்படியானால் இவர்கள் ஏன் இதைச் செய்யவேண்டும்?

ஆயுதப்போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழல் இது ஒரு நிரந்தரமான படையை கட்டிக்காப்பது, அதை போராட்டத்திலீடுபடுத்துவது அதற்கான செலவுகளை கவனிப்பது என்று பல்வேறு தேவைகளுக்கு தேவைப்படும் பணத்தை பெற்றுக்கொள்ள முடியாத போது இவைகள் தவிர்க்க முடியாதனவாகபடுகின்றன. இவைகளை மக்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்ற எண்ணத்தில் இவை இரகசியமாகவே செய்யப்பட்டுவருகின்றன. அவ்வாறாயின் இப்படியான செயல்களில் ஈடுபடுவது சரியானதா?

-இல்லை நாம் அப்படிச் சொல்லவில்லை.

கொள்ளை அடிப்பது, பறிமுதல் செய்வது, வரிவிதிப்பது எல்லாம் தவறான நடவடிக்கைகள் என கருதுபவர்கள் அரசியல் அதிகாரம் பற்றிய பிரச்சனைகளை புரிந்து கொள்ளாதவர்களே. ஆனால் இவைகளை செய்வதில் ஒருதிட்டவட்டமான வரைமுறைஅமைந்திருக்க வேண்டும். அது தேசத்தின் நிலைமை அரசியல் போராட்டத்தின் தன்மை என்பவற்றோடு சம்பந்தப்பட்டதாக அமைய வேண்டும்.

எமது தேசத்தில் இன்று நடைபெற்றுக்கொண்டிருப்பது ஒரு தேசத்தின் விடுதலைக்கான போராட்டம். ஸ்ரீலங்கா இராணுவத்தை இங்கிருந்து விரட்டி அடிப்பது. தேசத்தில் ஜனநாயக அரசை நிறுவுவது என்ற அடிப்படைகளை மையமாக கொண்ட போராட்டம். மக்கள் ஜனநாயக குடியரசை நிறுவுதலை நோக்கி வளர்ந்து செல்ல வேண்டிய எமது போராட்டத்தினைப் பற்றிய சரியான புரிந்துணர்வு இருப்பின் இத்தகைய செயற்பாடுகள் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட வடிவத்தில் வளர்ந்து செல்லும்.

நமது நாட்டின் ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பு படைகளை விரட்டுவதும், உள்நாட்டில் தேசிய அரசொன்றை நிறுவுவதுமான பணியில் ஒத்துழைக்கும் சக்திகள், எதிர்க்கும் சக்திகள் என்று பிரித்துப்பார்க்கவேண்டும். அனைத்து ஏகாதிபத்திய நிறுவனங்களும், ஸ்ரீலங்கா அரச நிறுவனங்களும் அவற்றின் முதலீடுகளும் நாட்டின் சுய பொருளாதாரத்திற்கும் தேசிய வளர்ச்சிக்கும் தடையாக சுரண்டிச் செல்பவையாக இருக்கின்றன. உள்நாட்டு மூலதனங்கள் உற்பத்திகள் எமது தேசிய செல்வத்தை வளர்ப்பவையாக உள்ளன.

உள்நாட்டில் முதலாளிய உற்பத்தியை இன்னும் வளர்ச்சி பெறவிடாது நிலப்பிரபுத்துவ காலனிய தடைகள் பெரும் பாரமாக அழுத்திக்கொண்டிருக்கும் நிலையில் அவற்றை உடைத்தெறியாது மேலே முன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னேற முடியாது. இதனுலேயே எமது போராட்டம் ஒரு ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டமாக அமைந்துள்ளதென்று நாம் கூறிவருகிறேம்.

பரந்துபட்ட மக்கள் மத்தியில் அரசியல் வேலை செய்வதும், ஆயுதம் ஏந்திய எதிர்ப்பு யுத்தத்தில் ஈடுபடுவதும் மக்களின் அதிகாரங்களை நிறுவுதலோடு சம்பந்தப்பட்டவை, ஒப்பீட்டளவில் எதிரி பலவீனமாக இருக்கும் இடங்களிலெல்லாம் மக்களின் ஜனநாயக அரசுவடிவங்களை பாதுகாக்க மக்கள் ஆயுதபாணிகளாக்கப்பட வேண்டும். இவ்வரசு அமைப்பின் நிர்வாகத்தின் கீழ் உள்நாட்டு தேசிய பொருளாதாரத்தை கட்டி எழுப்பும் பணியையும் பிரதேச பொருளாதார சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தையும் தொடரவேண்டும். மக்கள் ஜனநாயக அரசுவடிவங்களை தொழிலாளர் விவசாயிகள் மாணவர்கள் மற்றும் குட்டிபூர்சுவா வர்க்க, தேசியவாதப் பிரிவுகள் உள்ளடக்கிய கூட்டு அரசியல் வடிவங்களின் அடிப்படையில் உருவாக்கவேண்டும். இந்த அரசு உள்நாட்டில் சமாதானத்திற்காகவும், யுத்த கால பொருளாதாரத்தை கட்டி எழுப்பவும் மற்றும் தேசிய பொருளாதாரத்தை வளர்க்கும் முதலாளிய உற்பத்திகளை ஊக்குவிக்கும் விதத்தில் வரிகளை அறவிடவும் செய்யும். இதுவே ஸ்ரீலங்கா எதிர்ப்பு யுத்தத்தை நோக்கமாகக்கொண்டு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

இன்னும் தெளிவாக இதை சொல்வதானல், எமது பறிமுதல்கள் எப்போதும் தேசத்துரோகிகள், காட்டிக் கொடுப்போரின் சொத்துக்கள், அந்நிய ஏகாதிபத்தியங்களினதும் ஸ்ரீலங்கா அரசினதும் சொத்துக்கள் என்பவற்றின் மீதே கைக்கொள்ளப்பட வேண்டும். ஸ்ரீலங்கா மற்றும் அந்நிய மூலதனங்களை கொண்டு இயங்கிவரும் நிறுவனங்கள் மீது அதிகபட்ச வரி விதிப்பை-அவற்றை படிப்படியாக நஷ்டஈடின்றி தேசிய சொத்துக்களாக மாற்றியமைக்கும் நோக்குடன் செய்யவேண்டும்.

உள்நாட்டு-தமிழீழ-உற்பத்தி நிறுவனங்கள், வர்த்தகர்கள் சிறு வர்த்தகர்களைப் பொறுத்தவரை நியாயமான வரிவிதிக்கப்பட வேண்டும். இது மேலும் முதலாளித்துவ உற்பத்தியினை ஊக்குவிக்கும் நோக்கில் கையாளப்படவேண்டும். சுயாதீன உள்நாட்டு உற்பத்திக்கு துணைசெய்யும் விதத்தில் அந்நிய பொருட்கள் மீது அதிகவரி, தடை என்பன விதிக்கப்படவும், அந்நிய பாவனைப் பொருட்களை குறைக்கும் விதத்தில் மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஊட்டுவது அவசியம்.

உள்நாட்டில் சுடைமுதலாளிகளிடம் பறிமுதல் செய்தல் என்பதில் தரகுவியாபாரம் மற்றும் ஏகாதிபத்திய இறக்குமதியாளர்கள் சம்பந்தமாக கையாளும் வழிமுறையும் உள்நாட்டில் மூலதனச் சுழற்சியை பேணும் முதலாளிகளிடம் கையாளும் வழிமுறையும் வித்தியாசமாக அமையவேண்டும். இரண்டாவது பிரிவினருக்கு வரிவிலக்கு, குறைந்தவரி போன்ற ஊக்குவிப்பு முறைகள் கையாளப்பட வேண்டும்.

இந்தவழிமுறை கையாளப்படாவிடின் அது தேசிய சக்திகளை ஐக்கியப்படுத்துவதற்குப்பதில் மோதலையும், போராட்டத்தினையிட்டு அவநம்பிக்கையை மக்களிடம் ஊட்டவும் செய்யும். குறிப்பாக வீடுகளில் நடாத்தப்படும் கொள்ளைகள் நகைக்கடை கொள்ளைகள் போன்றவை மிகவும் மோசமான நடவடிக்கைகளாகும். இவை தேச விடுதலைப் போராட்டத்தை இழிவுபடுத்தி அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும்.

மக்கள் ஜனநாயக அரசு வடிவங்களை அமைத்தல் நிர்வகித்தல் என்ற நோக்கிலமையாத அனைத்து நடவடிக்கைகளும் கோட்பாடற்ற செயல்களாக போராட்டத்திற்கு குந்தகமாகவே அமையும் மக்கள் அரசு அதிகாரங்களை உருவாக்குதலில் முழுமையான வெற்றிவரும்வரை உள்நாட்டில் அரசியல் இயக்கங்களுக்கிடையில் ஐக்கியமும், அவற்றிற்கு சொந்தப் படைகளை வைத்திருக்கும் உரிமையை வழங்கலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிகவும் அக்கறையுடன் கவனிக்கப்பட வேண்டும். அரசு ஸ்திரமாகையில் அனைத்தும் அரசின் படைகளாகிவிடும்.

இந்தப் பின்னணியில் பார்க்கும் போது இங்கு நடைபெறும் கொள்ளைகள், ஆட்கடத்தல்கள் என்பன தேச பொருளாதாரம் தேசிய அரசை பாதுகாத்தல் என்பவற்றோடு சம்பந்தப்பட்டது என்ற கருத்தின் அடிப்படையில் செய்யப்படுவதாக தெரியவில்லை. தேசியசக்திகள் விரோதிய சக்திகள் என்ற அடிப்படையில் பிரித்துப் பார்ப்பதும் வரிவிதிப்பு, பறிப்பு, தடை விதிப்பு என்பவற்றில் அளவு வேறுபாடுகளை அந்த அடிப்படையில் செய்வதும் ஒரு மக்கள் அரசுவடிவத்திற்கே சாத்தியமாக அமையும். மக்கள் அரசு வடிவத்தை உருவாக்கி, நிர்வாகப் பரவலாக்கத்தை திட்டமிட்டு செய்யாதபோது, நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளிலும் கோட்பாட்டுக்குழப்பங்கள் ஏற்படும். இதனல் இவை தேச விடுதலைக்கு சார்பாகவோ முரணாகவோ செய்யப்படும் வரிவாங்கல், முதலாளிகளை கடத்தல் என்பன வெறும் 'பிளாக் மெயில்' விவகாரங்களாக கொச்சையாகிப் போகும் எனவே, எதிரி பலவீனமான அனைத்து பிரதேசங்களிலும் உள்ள மக்கள் ஸ்தாபனங்கள் அரசியல் குழுக்கள் எல்லாவற்றையும் அங்கீகரித்து மக்கள் ஜனநாயக அரசு வடிவமொன்றை உருவாக்கும் செயலை உடனடியாகத் தொடங்கியாக வேண்டும். தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசினை விஸ்தரிக்கிற ஆரம்பப்புள்ளியாத அமையப் போகும் இந்த அரசுவடிவத்தை உடனடியாக தொடக்கவேண்டும். முன்நிபந்தனையாக அனைத்து வெகுஜனஸ்தாபனங்கள், அரசியல்குழுக்கள், கட்சி சார்பற்ற மக்கள் அனைவரினதும் அரசியல் உரிமையும் பேச்சுரிமையும் ஜனநாயகமும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

## 4

## சரத்தின் மரணம்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ) யின் ஒரேபிரதிநிதியாக பாராளுமன்றத்தில் அங்கம் வகித்துவந்த கலவானதொகுதி எம்.பி சரத்முத்தட்டுவேகம கார் விபத்தொன்றில் காலமானர். உண்மையில் இவரது இறப்பு தற்செயலான விபத்தா அல்லது அப்படி ஒரு விபத்து ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகம் பரவலாக அரசியல் அவதானிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா அரசின் பாராளுமன்றத்தில் இலங்கை அரசாங்கத்தின் ஜனநாயக விரோத மக்கள் விரோத பாசிசசட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் எதிராக ஒலித்துக்கொண்டிருந்த ஒரே குரல். அரசுக்கு பெரும் தலையிடியை கொடுத்துக்கொண்டிருந்த ஒரே எம் பி சரத் மட்டுமே என்பதனல், இத்தகையதொரு சந்தேகம் மேலும் அதிகமாக எழுவது நியாயமே.

சரத்முத்தட்டுவேகமவின் மரணம் ஸ்ரீலங்காவிலும், தமிழீழத்திலும் உள்ள ஜனநாயக சக்திகளிடையே பெரிதும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. சரத்முத்தட்டுவேகமவின் மரணம் சம்பந்தமாக யாழ்நகரில் அஞ்சலி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. 22-05-86 அன்று பூரண கர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது. கடந்த பத்தாண்டு காலத்தில் யாழ்நகரில் அஞ்சலி செலுத்தப்பட்ட ஒரே ஒரு சிங்கள அரசியல்வாதி சரத்முத்தட்டுவேகம தான்.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியை சேர்ந்தவரென்பதால் தன்னை ஒரு கம்யூனிஸ்ட் என்று இவர் தமது இறுதிக்காலம் வரை சொல்லிக்கொண்டிருந்தார் ஆனல் சரத் சார்ந்திருந்த கட்சி உண்மையில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது அவர் ஒரு கம்யூனிஸ்டாக இருந்தார் என்பதோ ஒரு போதும் சரியானதல்ல, இது அவரை இழிவுபடுத்தும் நோக்கில் சொல்லப்படுவதல்ல. ஆனல் உண்மை அதுவே. சரத் ஒரு நேர்மையான முதலாளித்துவ ஜனநாயகவாதியாக, ஒரு பாராளுமன்ற உறுப்பினர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற விதத்தில் வரையறைக்குட்பட்ட அளவில் தனது கட்சிக்கும் அரசியல் சட்டத்திற்கும் முரண்படாதவிதத்தில் அவற்றிற்கு கட்டுப்பட்டு தன்னால் முடிந்தளவு நேர்மையாக செயற்பட்டு வந்தார் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால், அரசுக்கும் கட்சிக்கும் நேர்மையாக இருப்பதென்பது இந்த நாட்டின் மக்களுக்கும், புரட்சிக்கும் விரோதமாக இருப்பதென்பதை அவர்புரிந்து கொண்டிருப்பாரோ என்னவோ அதுதான் உண்மை. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ) வைப் பொறுத்தவரை அது இந்நாட்டின் தொழிலாள விவசாயிகளையும் இந்த நாட்டின் புரட்சியையும் காட்டிக்கொடுத்து, திரிபுவாத பாராளுமன்றபாதையைத் தழுவி, சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் தரகனாக இங்கிருந்து செயற்பட்டு வருகிறது

மக்களுக்கு அடிப்படை ஜனநாயக உரிமைகளே மறுக்கப்படுகின்ற ஒரு நாட்டில், சட்டபூர்வவாத, சமாதான வழிமுறையில் புரட்சிசாத்தியம் என்றும், பாட்டாளிவர்க்கம் ஆட்சியதிகாரத்தை இவ்வழிமுறைகளில் ஸ்தாபித்துக் கொள்ள முடியுமென்றும், குருச்சேவ், பிரஸ்நேவ் கும்பலால் பரப்பப்பட்ட திரிபுவாத வழிமுறையினை தொழிலாளிவர்க்கத்திற்கும், மக்களுக்கும் பரப்பி வருகிறது. இந்த திரிபுவாத தலைமைகள் உள்நாட்டு ஆளும்வர்க்கத்திற்கு சேவை செய்கின்றனவே ஒழிய, புரட்சிக்கு துரோகம் செய்கின்றனவே ஒழிய புரட்சிக்காக ஒரு போதும் உழைத்ததில்லை. தொழிலாளி வர்க்கத்தை தொழிற்சங்கவாதப் பாதைக்கும், பரந்துபட்ட மக்களை பாராளுமன்றப் பாதைக்கும் வழிகாட்டியது இந்த சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சி.

ஆனால் இங்கு நிலமைவேறு. இந்த கம்யூனிஸ்ட்கட்சி இங்கு ஒரு லேபலாகவும் எந்த வெகுஜன அடிப்படையும் அற்று இருப்பதுடன் பல்வேறு முதலாளித்துவ ஜனநாயகவாதிகளையும் உள்ளடக்கியதாக உள்ளது. இவர்களில் பலருக்கு தொழிலாளி வர்க்கம் பற்றியோ, புரட்சிபற்றியோ எதுவுமே தெரியாது. மனப்பூர்வமாக தாம் எது செய்கிறோம் என்று தெரியாமலேயே, அல்லது சில வசதிகளுக்காகவே கட்சியில் இருந்துகொண்டு தம்மளவில் ஒரு முதலாளித்துவ ஜனநாயக வாதிக்குரிய அளவு நேர்மையுடன் செயலாற்றும் பலரை இந்தக் கட்சியில் காணலாம். அந்த அடிப்படையில் அதாவது இங்கு ஒரு முதலாளித்துவ சனநாயகத்திற்காகவேனும் போராடும் ஒருகட்சி இல்லாத நிலையின் காரணமாக இந்தக்கட்சியுள் அங்கம் வகிக்கின்ற பல்வேறு கனவான்களுள் ஒருவராகவே சரத்தும் இருந்துள்ளார் என்றே நாம் கருதுகிறோம்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் ஏதாவதொரு முதலாளித்துவ ஜனநாயகக்கட்சி இருந்து, அதில் ஒருவர் அங்கத்தவராக இருந்திருந்தால் என்ன பேசியிருப்பாரோ, செய்திருப்பாரோ அதையே தான் சரத்தும் செய்தார். ஏனைய எம்பிக்கள் போலல்லாது இனவெறி, ஆதிக்கவெறியற்று தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வாக அரசுதீட்டிய அனைத்து பாசிச ஒடுக்குமுறைச் சட்டங்களையும் சரத் எதிர்த்தார். இறுதிவரை அவசரகாலச் சட்டத்தின் நீடிப்புக்கு எதிராக அவர் வாக்களித்து வந்தார்.

சரத் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் என்பதை விட்டுவிட்டு, அவர் ஒரு முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகவாதி என்ற அடிப்படையில் பார்ப்போமானால், அவரது செயல்கள் ஒவ்வொன்றும் துணிச்சலானவை, சிங்கள மக்கள் மத்தியில் இருந்து எழும் ஜனநாயகக் குரல்களை தனிநபராக நின்று பாராளுமன்றத்தில் ஒலித்தவர் அவரே. அரசை பாராளுமன்றத்தில் எதிர்த்து நின்று அது அம்பலப்பட்டு போகும் வண்ணம் செயற்பட்ட அவரது மறைவு துரதிஸ்டம் மிக்கது; சிங்கள ஜனநாயக சக்திகட்கும் மற்றும் ஜனநாயகவாதிகட்கும் கவலையை தருவது. எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயமான தன்மைகளை பாராளுமன்றத்தில் ஒலித்தவர் என்ற முறையில் அவரது மரணம் எமக்கும் கவலையை ஊட்டுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 5

## தொடரும் சாதிவெறி........

இப்படியும் நடக்கிறது என்ற தலைப்பில் காரைநகர் ஊரிப்பிரதேச மக்களினால் ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தது. தேசத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் சாதி ரீதியான ஒடுக்குமுறைகள் இன்னும் நிலவி வருகிறது.

சோசலிசம் என்பது எமக்கு எந்நாளும் பகற் கனவு தானா? என்ற கேள்வியுடன் முடியும் இந்த துண்டுப்பிரசுரத்தை இங்கு அப்படியே தருகிறோம். தேசத்தில் சாதிப் பிரச்சனை இல்லை என்று கூறி மார்தட்டிக் கொள்பவர்களும் அதை மூடி மறைத்து செயற்பட விரும்புவர்களும் இதை ஒரு முறை கவனிக்க வேண்டும். இதுதான் அத் துண்டுப்பிரசுரம்

## இப்படியும் நடக்கின்றது.

காரைநகர் ஊரிப் பிரதேசத்திலுள்ள சுமார் நாலாயிரம் மக்களாகிய நாம் அன்றாடம் குடிதண்ணீர் பாவனைக்கு எமக்கென இருந்த ஒரேயொரு கிணற்றை பாவித்து வந்தோம். மேலும் எமது குடிதண்ணீர் கஷ்டத்தை அறிந்த காரைநகர் சீநோர் சமூக அபிவிருத்தி நிறுவனம் மேற்படி கிணற்றிலிருந்து குளாய் மூலம் நீர் விநியோக ஒழுங்குகளை செய்து தந்துள்ளது யாவரும் அறிந்ததே.

தற்போது மேற்படி கிணற்றுள் இங்குள்ள பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த சில சாதிவெறி பிடித்த விஷமிகளால் நச்சுத் திரவகம் கலக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்களாகிய நாம் குடிதண்ணீருக்காக மிகவும் கஸ்டப்படுகின்றோம்.

இத்தனைக்கும் காரணமாக இருந்த விடயம் யாதெனில் கடந்த சில தினங்களுக்கு முன்பு இங்குள்ள எமது சமூகத்தைச் சேர்ந்த பெண் ஒருவரை உயர்சாதி என்று சொலலப்படுகின்ற வாலிபர் ஒருவர் திருமணம் செய்து கொண்ட காரணத்தினால் இதையே சாட்டாக வைத்து சாதி வெறிபிடித்த மனித மிருகங்களால் சுமார் நாலாயிரம் மக்களாகிய எமது ஒரேயொரு குடிநீர் கிணற்றில் திட்டமிட்ட சதி முயற்சி சில விஷமிகளால் கடந்த 09.05.1986 அன்று நஞ்சு கலக்கப்பட்டுள்ளது.

மேலும் இக் கிணற்றில் நஞ்சு கலக்கப்பட்ட விடயத்தை அறியாத பலர் இக் கிணற்று நீரைப் பாவித்ததினால் வயிற்றோட்டம், நெஞ்செரிவு போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு வைத்திய சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் இது விடயத்தை நாம் இங்குள்ள விடுதலை ஸ்தாபனங்களின் கவனத்திற்கு 12.5.86 திங்கள் காலை தெரிவித்தோம். மேலும் விடுதலை ஸ்தாபனங்களின் தீர்வை எதிர்நோக்கி நாம் காலை 8.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை காத்திருந்தோம், அத்துடன் இங்குள்ள திக்கரை கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர் ஒருவருடன் தொடர்பு கொண்டோம். அவர்களும் இதற்கான எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தவறியுள்ளனர் இவர்களின் நடவடிக்கையின்மையால் நாம் குடிப்பதற்கே ஒரு துளி தண்ணீரும் இன்றி மிகவும் கஸ்டப்பட்ட நிலையிலும் என்ன செய்வதென்றறியாத நிலையிலும் நாம் அயலிலுள்ள ஒரு கிணற்றை பயன்படுத்தினோம் அன்றைய இரவே அக்கிணற்றிலும் நஞ்சுடன் குப்பை கூழங்களையும் பழைய கழிவு எண்ணை போன்றவற்றையும் சாதிவெறி பிடித்த மனிதாபிமானமற்ற அரக்கர்களால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் சுற்றுடலிலுள்ள வேறு கிணறுகளிலும் குறிபபிட்ட நஞ்சுக் கழிவுப் பொருட்கள் கலக்கப்பட்டன.

மேலும் மக்களாகிய நாம் ஒன்றாகக் கைகோர்த்து எமது சுதந்திரத்தை வென்றெடுக்க வேண்டிய இக்காலகட்டத்தில் இப்படிப்பட்ட அடாவடித்தனங்களில் அவர்கள் ஈடுபடுவதையிட்டு நாம் வேதனைப்படுவதோடு இச் செயலை முற்றாக வெறுக்கின்றோம். ஆகவே இப்பிரச்சனையை மனித நேயமுள்ள மக்களும், பொது ஸ்தாபனங்களும் முன்னின்று தீர்த்து வைப்பதை நாம் விரும்புகின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தொடர்ந்து இத்தகைய பாதகமான செயல்கள் தொடருமானுல் நாமும் எமது பொறுமையை இழக்க நேரிடும் என்பதை மிகவும் மனவேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றேம்.**

உரிமைக்காகப் போராடும் வேளையில் குடிநீருக்காகப் போராட்டமா?

எம் இனத்திலேயே இத்தனை பாகுபாடா?

சோஷலிசம் என்பது எமக்கு எந்நாளும் பகற்கனவா?

பிரசுரத்தில் தடித்த எழுத்தில் குறிக்கப்பட்டுள்ள விசயங்கள் தெரிவித்துள்ளவை எந்தளவுக்கு செயல் பூர்வமானவையோ எமக்கு தெரியாது, ஆனுல் இத்தகைய ஜனநாயக ஒடுக்குமுறைகளை நீண்ட நாட்கள் மக்கள் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பது மட்டும் உண்மையே!

தேசிய விடுதலைப் போராட்டம், புரட்சிகர மக்கள் யுத்தப் பாதையில் முன்னெடுக்கப்படாதவரை எத்தகைய ஜனநாயக ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து வென்று செல்லும் ஒரு புரட்சி அலையாக அது வளர முடியாது. தொழிலாள விவசாயிகள் (சாதி ரீதியாக ஒடுக்கப்படும் மக்களில் ஏகப்பெரும்பான்மையின் தமது உழைப்பால் இந்த மண்ணை வளமாக்கிய தொழிலாள விவசாயிகளே) தாம் தேசிய விடுதலைக்காக ஆயுதமேந்தாதவரை, இந்தப் போராட்டத்தில் தலைமையேற்காதவரை எமது போராட்டம் புரட்சிகர மக்கள் யுத்தமாக அல்லாது, சிறிலங்கா இராணுவத்திற்கெதிரான ஒரு ஆயுத எதிர்ப்பாக மட்டுமே சிறுமைப்பட்டுப்போகும்!

தேச விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றும் அனைத்து ஜனநாயக சக்திகளும் அனைத்து ஜனநாயக ஒடுக்குமுறைக்கும் எதிராக குரல் எழுப்ப வேண்டும். தேசிய விடுதலைக்கான ஐக்கியத்தை நேசிக்கும் அனைத்து சக்திகளும், உள்ளே நடக்கும் ஜனநாயக உரிமை மறுப்புகளை எதிர்த்துப் போராடாமல் அந்த ஐக்கியத்தை சாதிக்க முடியாது.

சாதி ரீதியான ஒடுக்குமுறைகளுக்கு முடிவு கட்டவும் இதர அனைத்து ஜனநாயக உரிமை மறுப்புகளையும் முறியடித்து மக்கள் ஜனநாயக தமீழீழத்தை மலரச் செய்ய அனைத்து புரட்சிகர சக்திகளையும் மக்கள் யுத்தப்பாதையில் அணிதிரளுமாறு அறை கூவி அழைக்கிறேம். ✱

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 5 | NDP | NDF |
| 6 | 1984 | 1983 |
| 9 | மனையியல் கலைக்கழகம் | மனைவி பல்கலைக்கழகம் |
| 19 | விபத்து ஏற்பட்டுள்ளதா | விபத்து ஏற்படுத்தப்பட்டுள்ளதா |
| 12 | 'இளம் பெண்' ஓவியத்தை வரைந்தவர் சுகுணு தம்பித்துரை. | |

நமது உரிமைகளுக்காகப் போராடும் ஆசையால் ஒன்று திரண்டு ஒருவரோடு ஒருவர் பிணைந்து நின்று நாமெல்லாம் நண்பர்கள் என்ற உண்மையை உணர்ந்தாலன்றி, நமது வாழ்வை போராடிப் பெறமுடியாது.

**- கோர்க்கி -**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வியட்னாமிய ஆக்கிரமிப்பு படைகள் கம்பூச்சியாவிலிருந்து வெளியேறுமா?

கம்பூச்சியாவில் நிலை கொண்டுள்ள தனது ஆக்கிரமிப்புப் படைகளின் ஒரு பகுதியை திருப்பி அழைக்க முடிவு செய்துள்ளதாக வியட்னாமின் ஹனோய் உத்தியோக பூர்வ செய்திகள் மீண்டும் அறிவிக்கின்றன.

கடந்த ஓராண்டு காலத்துள், ஜனநாயக கம்பூச்சியாவில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தனது துருப்புக்களை திருப்பி அழைக்கப் போவதாக வியட்னாம் அடிக்கடி செய்தி வெளியிட்டு வந்துள்ளது. 1990-ம் ஆண்டளவில் கம்பூச்சியாவில் இருந்து தனது இராணுவம் முழுமையாக வெளியேற்றப்பட்டுவிடும் என்று கடந்த பெப்ரவரி மாதம் வியட்னாம் ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. இது தொடர்பாக தாய்லாந்து வெளி நாட்டமைச்சர் சித்தி சுவேற்சிலர் தெரிவித்த கருத்துக்கள் மிகவும் சுவையானவை.

கம்பூச்சியாவில் நிலை கொண்டிருக்கும் துருப்புகள் தாய்லாந்து மீது தாக்குதலை மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பது பற்றி கருத்துத் தெரிவிக்கும்போது, அவற்றைத் திருப்பியடிக்கும் தயார் நிலையில் தமது நாட்டுப் படைகளும், மக்களும் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். மேலும் இந்த 'ஹனோய்' செய்தியையிட்டு இவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்!

'வியட்னாமின் இத்தகையதொரு பிரச்சாரத்தை நான் ஒரு போதும் நம்பப் போவதில்லை. வியட்னாம் தனது துருப்புக்களை கம்பூச்சியாவிலிருந்து அகற்றுவதாயின், அது கம்பூச்சிய தேசபக்த எதிர்ப்புப் படைகள் முற்றாக அழித்தொழிக்கப்பட்ட பின்னரே நடைமுறைக்கு வரும். அதாவது ஹெங்சமரின் ஆட்சி மேலும் பலப்படுத்தப்பட்ட பின்னரேயாகும். ஆனால் அவர்களது இந்த நோக்கம் ஒருபோதும் வெற்றி பெறப் போவதில்லை. எனவே அவர்கள் தமது ஆக்கிரமிப்பு யுத்தத்தை நிறுத்தப் போவதும் இல்லை ஜனநாயக கம்பூச்சியாவில் தேசபக்த முக்கூட்டு அரசின் பலம் மேலும் மேலும் அதிகரித்து வருவதுடன், தேசபக்த எதிர்ப்புப் படைகள் மேலும் மேலும் ஆழமாக வியட்னாமிய ஆக்கிரமிப்பாளரை ஊடுருவி நிலைகுலையச் செய்து வருகின்றன.

'என்னதான் ஹெலிகொப்ரர்களையும் கனரக ஆயுதங்களையும் அவர்கள் குவித்து வைத்து தாக்கிய போதும், தேசபக்தப் படைகளை அழித்தொழிப்பதில் தீவிரமாக முயன்றபோதும அது வியட்னாமுக்கு எதிரான எதிர்ப்பு யுத்தத்தை பலவீனப்படுத்துவதற்கு பதிலாக மேலும் மேலும் பலப்படுத்தியே வருகின்றது. 1990ம் ஆண்டளவில், வேண்டுமானால் வியட்னாமியப் படைகள் தமது இராணுவச் சீருடைகளை களைந்து விட்டு ஹெங்சமரின் இராணுவச்சீருடைகளை மாற்றி அணிந்து கொள்வது ஒருவேளை நடைபெறலாமே ஒழிய, அவர்கள் வெளியேறப்போவதில்லை. வியட்னாம் தனது ஆக்கிரமிப்புக் கொள்கையை கைவிடுவதாயின் சோவியத் தனது ஆயுத நிதி உதவிகளை வியட்னாமுக்கு அளிப்பதை கைவிட்டாக வேண்டும்.

தாய்லாந்து வெளிநாட்டமைச்சர் சித்தியின் இந்தவார்த்தைகள் வியட்னாமிய ஆக்கிரமிப்பாளர்களை அம்பலப்படுத்தும் சரியான ஒரு சித்தரிப்பாகும். வியட்னாம் இன்று துருப்புகளை வெளியேற்றுவது தொடர்பாக அனைத்து பிரச்சாரங்களையும் செய்து கொண்டிருக்கிறது. இதன் உண்மையான நோக்கம் உலக அரங்கில் அம்பலமாகிக் கொண்டிருக்கும் தன்னையும், சரிந்து கொண்டிருக்கும் தனது பெயரையும் பாதுகாக்கவும் போரிட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுக் கொண்டிருக்கும் தனது பெயரையும் பாதுகாக்கவும் போரிட்டுக் கொண்டிருக்கும் தமது துருப்புகளை திருப்திப்படுத்தவுமே என்பது மிகவும் வெளிப்படையாகும்.

வியட்னாம் இந்தோசீனப் பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை நிறுவும் நோக்குடன் தேசியவெறி கொண்டு செயற்பட்டு வருகின்றது. இதை சோவியத் தனது ஏகாதிபத்திய மேலாதிக்க நலன்களுக்கு இசைவாக பயன்படுத்தி வருகின்றது. சோவியத் சமூக ஏகாதிபத்தியம் அனைத்துலக நாடுகளிலும் தனது இராணுவ அச்சுறுத்தல்களை பிராந்திய வல்லரசுகளூடாக திட்டமிட்டு நிறைவேற்றி வருகிறது. இதன் பல இலட்சக் கணக்கான துருப்புகள் ஆப்கானிஸ்தானில் மக்கள் விரோத அழித்தொழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. சோவியத்தினதும் வியட்னாமினதும் யுத்த வெறிக் கொள்கைகளுக்கு பலியாகிவரும் சோவியத் வியட்னாமிய இராணுவத்தினரிடையே இன்று விரக்தியும், ஊசலாட்டமும் ஏற்பட்டுவருகிறது. இவர்களுக்கேற்பட்டு வரும்அதிருப்தியைதிருப்திப்படுத்தவே இரண்டும் ஆப்கானிஸ்தானில் இருந்து துருப்புகளை வெளியேற்றுவோம் கம்பூச்சியாவில் இருந்து துருப்புக்களை வெளியேற்றுவோம் என அடிக்கடி வாய் கிழியக் கத்திக்கொண்டிருக்கின்றன.

ஆக்கிரமிப்பாளர்களின் யுத்தவெறிக் கொள்கைகளுக்கு பலியாகிக் கொண்டிருக்கும் வியட்னாமிய ஆக்கிரமிப்புப் படைகளில் உள்ள சில வீரர்கள் தங்கள் உறவினர்களுக்கு எழுதிய கடிதங்களை கீழே தருகிறோம். இக்கடிதங்கள் சுமந்துள்ள துன்பதுயரங்களையும் அதிருப்திகளையும் காணும்போது எவ்வாறு படைகளிடையே விரக்திநிலை பரவிவருகின்றதென்பதை புரிந்துகொள்ளமுடியும். இக்கடிதங்கள் கம்பூச்சியாவில் உள்ள நிலைமையையும் வியட்னாமிலுள்ள நிலைமையையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. படைவீரர்களின் வாழ்க்கை மிகவும் சோர்வானது. இடர்மிகுந்தது.

இப்போராட்டமானது வியட்னாமிய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு மிகவும் கஷ்டமான நிலமைகளை தோற்றுவித்துள்ளது. கடிதங்களில் ஒன்றில் ஒரு வீரர் 'இங்கு மக்களே நமது எதிரிகள்' என்று எழுதுகிறார். 'பீக்கிங் றிவ்வியூ'வில் (Dec 1985 இதழ்) வெளியான கடிதங்களில் இருந்து நான்கு கடிதங்கள் இங்கு தரப்பட்டுள்ளன. நபர்களை இனம்காணும் பெயர்கள் ஊர்கள் என்பன விடப்பட்டுள்ளன.

**1**

ஏப்ரல் 6, 1985
**கம்பூச்சியா**

*அன்பான சகோதரனே!*

எமது ஆரவாரமற்ற சொந்தநகரம் இந்நாட்களில் எப்படி இருக்கும் என்பதை நான் கற்பனை செய்துபார்க்கிறேன். எல்லாப் பதினெட்டுவயதை அடையும் இளைஞர்களும் கட்டாயம் சிரமப்படப்போகிறார்கள் இன்னும் ஒரு மாத காலத்தில் எமது இளைய சகோதரன் கட்டாய இராணுவத்திற்கு இழுக்கப்படுவான். நீங்கள் அவனை இராணுவத்திற்கு வெளியே வைத்திருக்கமுடியாது. கம்பூச்சியாவில் எதிரி சோர்வடையாது உசாராகவே உள்ளான். அத்துடன் இப்போது நாம் நெருக்கடியான ஒரு இடத்தில் உள்ளோம். இக் கோடை காலத்தில் எமது இராணுவம் எதிரியின் எல்லாத் தளங்களையும் கைப்பற்றியது ஆனால் நாம் பெருமளவு இழப்பினாலும், (பாதிப்பினாலும்) காயங்களினாலும் பாதிக்கப்பட்டோம். எங்களிடம் ஒரு சேனைப்பிரிவே இவ்வாறு உள்ளது. இவர்களுடன் எண்ணுக் கணக்கானவர்கள் தமது கைகளையும் கால்களையும் இழந்துள்ளனர்.

பின்பிரதேசத்திலிருக்கும் போது இரவு நேரத்தில் கிராமத்துள் சென்று கோழிகளையும், வாத்துகளையும் பிடிப்பதால் எமது உணவு ஓரளவு சகிக்கக்கூடியதாக உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கு பொதுமக்களே எமது எதிரிகளாகவும் அதாவதுஎமது எதிரிமக்களே என்பதாகவும் நாம் அடிக்கடி உணர்கிறேம். கம்பூச்சிய பழங்குடிமக்கள் எப்போதும் தமக்கு வெற்றி கிடைக்கும் என்பதற்காக எப்பக்கமும் சாயத்தயாராக உள்ளனர். எமக்கு மரணம் என்பது நாள்தோறும் நடைபெறும் ஒரு நிகழ்வாகிவிட்டது நான் இவை எல்லாவற்றுலும் அடிக்கடி பிரச்சனையூட்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன் சுருக்கமாக சொன்னல் நான் எனது வாழ்க்கையை ஒருவாறு ஓட்டிவிட முயல்கிறேன். நீங்கள் அதிகம் என்னையிட்டு கவலைப்படவேண்டாம்.

உங்கள் சகோதரன்

........................

ஏப்ரல் 6 1985
கம்பூச்சியா

அன்பு அம்மா, குட்டித் தம்பி

நான் இந்த இராணுவ முகாமில் மிகுந்த மனச்சோர்வுடன் உள்ளேன். அடிமேலடி வைத்து முன்னும் பின்னுமாக நடந்துவிட்டு கண்களில் நீர்மல்க ஓய்வுக்கு திரும்பிவிட்டேன். நான் எனது உடல் நோக்களை மறக்கவும் கடுமையாக முயற்சி எடுக்கின்றேன். ஒரு போலியான புன்னகையுடன் வீட்டிற்கு திரும்பி உங்களிடம் இணைந்து கொள்வதற்கான வாய்ப்பையும் விரைவாக கிட்டாதா என எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்

நாங்கள்- போர்வீரர்கள் கம்பூச்சியாவில் அனுபவிக்கும் துயரங்களை எவ்வாறு விபரிப்பதுஎன்று எனக்கு புரியவில்லை எத்தனையோ பயங்கரமான சம்பவங்களை முகத்துக்கு முகம் வைத்தாற்போல் பார்த்து நான் மிகவும் மனக்கிலேசமுற்றுப் போனேன். நம்பிக்கைகள் தூரவிலகிச் சென்றுவிட்டதாகவும், மரணம் எனது அறைமூலைக்குள்ளேயே வந்து நிற்பதாகவும் உணர்கின்றேன்.

உங்களிடமும் உங்களது அன்பான அரவணைப்பிலுமிருந்தும் விட்டு விலகி மூன்று ஆண்டுகள் ஓடிவிட்டபோதும் இந்தப்பிரிவினுல் பெரிதாக நாம் எதையும் சாதித்துவிடவில்லை. இது எனக்கு மிகுந்த மனத்துயரை உருவாக்குகின்றது.

தம்பி! வான் எப்போதும் கவனமாகப்படி. இங்கு எனது பிரிவிலுள்ள போர்வீரர்கள் எழுதவோ வாசிக்கவோ தெரியாதவர்களாக உள்ளனர். அதற்காக மற்றவர்களை கடிதம் எழுதித்தரும்படியும் படித்துக்காட்டும்படியும் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். எனவே மறந்துவிடாதே கடுமையாக உழைத்துப்படி.

அம்மா, தம்பி- விடாமுயற்சியுள்ள வேலையும் கண்டிப்பான கொடிய வாழ்க்கையையும் சொல்லப்போனுல், எனது பொருளாதார உயர்வுக்கோ அல்லது உணர்வின் துயருறுநிலைக்கோ எந்த முடிவையும் தரவில்லை. மாறுக எனது உடல்நிலையே மிகவும் மோசமாக பாதிப்படைந்துள்ளது அளவுக்கு மீறிய அலைச்சலால் நான் அண்மையில் சுகயீனமுற்று இருக்கவேண்டியிருந்தது.

உங்கள் மகன்-
உன் அண்ணு

........................



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3

ஏப்ரல் 10, 1985
கம்பூச்சியா

அன்பின் பாட்டனுக்கும், அம்மாவுக்கும், சித்திக்கும்,

பல அபாயங்களை தாண்டிய பின் நான் எனது மேலதிகாரியுடன் தாய்லாந்து எல்லையை அடைந்துள்ளேன். நான் அவரது மெய்க்காவலாளாக இருக்கிறேன். எமது பயணத்தின்போது, நாங்கள் 'சுடுகாடு' என்று அழைக்கப்படும் இடத்திலேயே தங்கினோம். எனது கண்ணுக்கெட்டிய தூரமெல்லாம் இறந்த உடல்களும் காயப்பட்டவர்களுமாக எல்லாப் பகுதியிலும் சிதறிக்கிடந்தன. கைகளோ கால்களோ இல்லாது கிடந்த இராணுவ வீரர்களின் உடல்கள் பார்க்க மிகுந்த பயங்கரமாக இருந்தன. ஒரு இராணுவ வீரன்என்னிடம் ஒரு சிகரட் கேட்டான். நான் என்னிடமிருந்த நல்ல பத்து சிகரட்டுகளை அவனுக்கு கொடுத்தேன் மிகுந்த நன்றியுடன் அவன் சொன்னான் "நான் உன்னை மீண்டும் சந்திப்பேனோ என்னவோ தெரியாது ஆனால் உயிரோடிருந்தால் நாம் மீண்டும் எமது நாட்டில் சந்திப்போமாக இந்தக் கொலைகார யுத்தத்தில் நீ அதிஸ்டசாலியாக இருக்க எனது வாழ்த்துக்கள். சென்ற ஆண்டில் குறைந்த பயிற்சியாலும் தாக்குதல் அனுபவமின்மையாலும் பலர் செத்துப்போனதாக அவன் மேலும் என்னிடம் சொன்னான். இந்த இளைஞனும் நானும் 1984 இல் இராணுவத்தில் சேர்ந்தோம். மறுநாள் அவன் இரத்தப்பற்றுக் குறையால் இறந்து போய் விட்டான்.

பாதுகாப்புப்படையில் நான் நன்றாகவே உள்ளேன். எனவே அதிகம் கவலைப்பட வேண்டாம் முன்னை விடவும் அதிகமாக எனக்கு இறைச்சியும் மீனும் உணவாக கிடைக்கிறது. ஏனென்றால் நான் இங்கு கைப்பற்றியவர்களிடம் எடுத்துக் கொண்டபணத்திற்கு அவற்றை வாங்கக் கூடியதாக உள்ளது.

எங்கள் ஆறாவது மாமாவின் மகன்'வு' ஒரு கலாட்படை வீரனாக இருப்பதால் அவன் நிலை மிகவும் மோசமானது. மரணத்தின் பிசாசுக்கரங்கள் எப்போதும் அவனை எதிர்பாராமல் பிடித்துக்கொள்ளக்கூடும்.

எங்கள் இரண்டாவது பாடலியின் மகன் லுவான் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை. அவன் ஒரு விமான எதிர்ப்பு துப்பாக்கியாளனாக இருப்பதால் அவன் அதிகம் வேலைசெய்யத் தேவையில்லை.

உங்கள் மகன்

.. ........ .. ........

4

அன்பு .. ..

இங்குள்ள மக்கள் எம்மை 'மேலாதிக்கவாதிகள்' என்றே அழைக்கிறார்கள். அவர்கள் எமக்குப் பயப்படுகிறார்கள். எங்கள் முகாம்களின் அருகாக அவர்களது வண்டிகள் போகும்போது நாம் அவர்களை நிறுத்தி அவர்களிடம் 'வைன்' வாங்குவதுண்டு. ஏனெனில் எம்மிடம் பணம் இல்லை. அவர்களிடம் இல்லையெனில் வெறும் போத்தல்களை அவர்களிடம் கொடுத்து திரும்பி வரும்போது தரும்படி கேட்போம். அல்லது அவர்கள் பணம் தரவேண்டும். அதாவது அது தண்டமாக அறவிடப்படுகிறது. நிகுயன், நாம் எவ்வளவு நல்ல பொழுதுகளை கொண்டவர்களாக இருக்கிறோம் தெரியுமா. நாம் அவர்களது சிக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

•

ரெட்டுகளை விரும்புமளவு புகைக்கலாம். டசின் கணக்கான பெட்டிகள் வரை நாம் அனுபவிக்கக்கூடியதாக இருக்கிறது. எமக்கு ஒரு வியாபார ஸ்தாபனத்தின் ட்றக் தேவைப்பட்டால், நிலமை மிகவும் உயிரோட்டமுள்ளதாக மாறிவிடும். ஏனெனில் அவை தாய்லாந்திலிருந்து எல்லாவகைக் குடிவகைகளையும் கொண்டு வழிகின்றன. இவ்வகையான நேரம் எவ்வளவு குதூகலமானது.

சண்டையிடும்போது, மிக அண்மையில் 'லொங் ஜிபாங்' இலிருந்து வந்த 'தாஸ்' என்ற எனது நண்பனொருவன் எதிரிகளால் உயிருடன் பிடிக்கப்பட்டான். ஒரு தாக்குதலில் முன்னணியில் மோட்டார் ஓட்டிச் சென்ற இவன் பிடிபட்டான். அவன் உயிரோடு இருக்கிறானா இல்லையா என்பது இன்னும் தெரியவில்லை.

உமக்குத் தெரியுமா? ஒவ்வொரு இராணுவ வீரனும் அதிகாரியும் தமக்குச் சொந்தமான எல்லாப் பொருளையும் ஒவ்வொரு தாக்குதலுக்கு முன்னாலும் விற்றுவிடுகிறான். ஏனென்றால் தனது விருப்பத்திற்குக் குடிக்கவும் சாப்பிடவுமே இவன் அவ்வாறு செய்கிறான், துரதிஷ்டவசமாக அவன் அரைப்பட்டினியுடன் இருக்க அனுமதிக்கப்படுவதே இல்லை!

இப்போது வரை எல்லாம் நல்லபடி உள்ளது. வாழ்த்துக்கள்!

---

விவசாயிகளிடம் இருப்பது சொந்த நிலம் அல்ல; அது சமுதாயநிலம். சமுதாய நிலத்தை விற்க யாரையும் அனுமதிக்க முடியாது என்றும் சொல்லப்படுகிறது. இது கூட ஒரு ஏமாற்று வித்தையாகும பிரபுவம்சத்தினருக்கும் வியாபாரிகளுக்கும் கூடச் சமுதாயங்கள் இல்லையா? பிரபுவம்சத்தினரும் வியாபாரிகளும் கூட கம்பெனிகளாகக் கூட்டுச் சேர்வதில்லை, நிலத்தையும் ஆலைகளையும் வேறு இஸ்டமான எவற்றையும் சேர்ந்து வாங்குவதில்லையா? விவசாயிகளுக்குக் கட்டுப்பாடுகளும் தடைகளும் கண்டுபிடிக்க முயலும் எல்லாவகைப் போலீஸ் கயவர்களும் பிரபுவம்சத்தினரின் ஸ்தாபனங்களுக்குத் தடை, கட்டுப்பாடு எதுவும் விதிக்காதது ஏன்? அதிகாரிகளிடமிருந்து எந்த நன்மையையும் விவசாயிகள் எப்போதும் பெற்றதில்லை உதைகளையும் பலவந்தப்பணம் பறித்தலையும் அவமதிப்புகளையும் மட்டுமே அவர்கள் பெற்றிருக்கிறார்கள் தங்கள் எல்லாக் காரியங்களையும் தாங்களே நடத்தாத வரையில், முழு விடுதலையையும் முழுச் சமத்துவத்தையும் பெறாத வரையில், விவசாயிகள் எந்த நன்மையையும் பெறமாட்டார்கள். விவசாயிகள் தங்கள் நிலத்தைச் சமுதாயத்தின் பொதுச் சொத்தாக்க விரும்பினால், அவர்கள் காரியத்தில் யாரும் தலையிடமுடியாது; அவர்கள் இஷ்டப்பூர்வமாக ஒரு கூட்டுச் சமுதாயம் அமைத்துக் கொள்வர்; அதில் தங்களுக்கு விருப்பமானவர்களைத் தாங்கள் விரும்பும் நிபந்தனைகளுக்கேற்ப சேர்த்துக் கொள்வர்; தாங்கள் விரும்பும் விதத்தில் முற்றிலும் சுதந்திரமாக ஒரு கூட்டு ஒப்பந்தத்தை வரைவார்கள். விவசாயிகளின் கூட்டுச் சமுதாய விவகாரங்களில் எந்த அதிகாரியும் தலையிட வேண்டாம். எந்தவிதமான கட்டுப்பாடுகளையும் தடைகளையும் விவசாயிகள் மீது விதிக்கலாம் என்று எவரும் குயுக்தி செய்ய வேண்டாம்.

-லெனின்-

- நாட்டுப்புற ஏழை மக்களுக்கு -

- பக்கம் 114 -

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அபிஞலெஸ்சின் கட்டுரையும் 'ஒலி'யின் திரிப்பும்

Students Movements in the Asean Region என்ற நூலில் வெளியான The Philipine Students Movement: Historical Notes என்ற இந்தக் கட்டுரையின் தமிழ்வடிவம் 1985 அக்டோபரில் வெளிவந்த தேசியமாணவர் மன்றத்தின் (NUS) பிரச்சார ஏடான ஒலி சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. தற்செயலாக எமது கைக்குக் கிடைத்த மூலக்கட்டுரையை அண்மையில் படித்தபோது, மேற்படி ஒலிகட்டுரையுடன் மூலக்கட்டுரையை ஒப்பிட்டுப் படிப்பது அவசியம் எனப்பட்டது ஏனென்றால் ஒலிக்கட்டுரையில் அபிஞலெஸ் எழுதியதாக நாம் படித்தகட்டுரைக்கு நேரெதிராக மிகவும தெளிவாக மக்களது அரசியற் போராட்டத்தில் மாணவர்களின் பங்கு என்றவிசயம் பற்றிய கருத்துக்களை உள்ளடக்கியிருந்தது மூலக்கட்டுரை. முழுமையாக ஒப்பிட்டுப் பார்த்தபோது எமக்கு மிகவும் அதிர்ச்சியூட்டக்கூடியவிதத்தில் மிகமோசமான திரிப்புவேலைகள், வெட்டுக்கொத்துக்கள், இட்டுக்கட்டுக்களுடன் இந்தக்கட்டுரை ஒலியில் வெளியிடப்பட்டு இருந்ததைக் கண்டோம்.

'இதனைப் படிப்பவர்களின் நன்மைகருதி சில விசயங்கள் எளிமைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன, என்று முன்கூட்டியே ஒரு குறிப்பினை சேர்த்துவிட்டு, எளிமைப்படுத்தல் என்ற பெயரால் படுமோசமான விதத்தில் கட்டுரை திரிக்கப்பட்டுள்ளது. மூலக்கட்டுரைக்கு இருந்த பிரதானமான அரசியல் அம்சங்கள் நீக்கப்பட்டு புதிய (ஒலியின் சொந்தக்) கருத்துக்கள் புகுத்தப்பட்டுள்ளன. இதில் வேடிக்கை என்னவென்றால் மூலக்கட்டுரையின் கருத்துக்கு நேரெதிரான கருத்துக்கள் தோன்றும் வண்ணம் கட்டுரையைத்திரித்து பெயர்த்ததோடு நின்றுவிடாமல், கட்டுரையின் இறுதியில், இந்தக் கட்டுரையில் இருந்து எமது நாட்டு மாணவர் இயக்கம் ஒன்று எவ்வாறு அமையலாம் என்று வாசகர்கள் கருதுகிறீர்கள்? 'என்று ஒரு கேள்வியைவேறு கேட்டுவைக்கிறது ஒலி.

தேசிய மாணவர் மன்றமும் சரி அதன் பத்திரிகையும் சரி எமது நாட்டு மாணவர்கள் மத்தியில் தமது திரிபுபட்ட அரசியல் மார்க்க அடிப்படையில் வேலைசெய்ய பூரண உரிமையுண்டு. ஆனால், அரசியலற்ற, அனைத்துமாணவர்களுக்குமான ஒரு வேடிக்கைமிக்க ஒருவெகுசன ஸ்தாபனமாக மாணவர் அமைப்பை கட்டவிழையும் தமது நோக்கத்திற்காக அபிஞலெஸ் போன்றோரின் கட்டுரையை திரித்து வெளியிடவேண்டாம். தாமே சொந்தமாக எழுதிக் கொள்ளட்டும். மாக்ஸில் இருந்து, மாவோவரையான மாக்ஸியத்தின் தலைவர்களின் பெயர்களைச் சொல்லிக்கொண்டே இன்று திரிபுவாதம் நடைபோடுகிறது. வார்த்தைகளைத்திரித்து கருத்துமயக்கங்களை ஏற்படுத்தல் போன்ற வேலைகளைச் செய்தல் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப்பற்றி அக்கறைப்படாமல் அப்படியே வார்த்தைகளைப் பெயர்த்துக்காட்டுதல் போன்ற வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. தமிழ் வாசகர்களை முட்டாள்களாக நினைத்துக் கொண்டு தேசிய மாணவர் மன்றம் செய்துள்ள இந்தவேலையோ மிகவும்மோசமான நடவடிக்கை என்பதாலேயே இக்கட்டுரையின் சரியான மொழியாக்கத்தை இங்கு வெளியிடுகின்றோம். இலக்கு வாசகர்களின் வசதிக்காக ஒலி கட்டுரையையும் சேர்த்து வெளியிடுகிறோம்.

தேசிய மாணவர் மன்றத்தினதும் (NUS) ஒலி வெளியீட்டாளர்களதும் அரசியல் கோட்பாடுகளுக்கேற்பவே, அவற்றைப் பலப்படுத்தும் விதத்திலேயே இச்கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது இந்தக்கட்டுரையில் NUS இன் மூன்று நோக்கங்களுக்கேற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விதத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

1 மாணவர் அரசியல்
2 மக்களது அரசியல் போராட்டத்தில் மாணவர்களின் பாத்திரம்.
3 கோட்பாடு அற்ற ஐக்கியம்.

NUS, மாணவர்கள் ஒரு திட்டவட்டமான அரசியல் அடிப்படையில் திரட்டப்படுவதையும் மாணவர்கள் மக்களது புரட்சிப் போராட்டத்தில் மிகவும் செயலூக்கம் மிக்க பங்காற்றுவதையும் ஏற்றுக் கொள்வதில்லை. சமூகத்தின் அனைத்துமாணவர்கட்குமான ஒரு அமைப்பை கட்டப் போவதாக கனவுகாணும் NUS, அந்த நோக்கத்திற்காகவே வெகுஜன ஸ்தாபனம் அரசியல் அடிப்படையில் கட்டப்படுவதை எதிர்க்கிறது. இச்காரணத்தின்லேயே அது தொடர்பான அனைத்து விசயங்களையும் திரித்துவிட்டுள்ளது. ஜோஸ் சிசொன் மாணவர் இளைஞர்களை நோக்கிவிட்ட அறைகூவலை கூட முற்றாகத்திரித்துள்ளது. பலஇடங்களில் 'இளைஞர்கள்' மக்கள் ஆகிவிட்டனர். இதன் மூலம் இளைஞர்களின் அரசியற் பங்கு மறுதலிக்கப்பட்டுள்ளது.

கோட்பாடுகள் எதுவுமற்று, ஐக்கியம் நிலவவேண்டும் என விரும்பும் (NUS) அந்தக் கருத்தை வலியுறுத்தும் விதத்தில் (இதை அபினலெஸ் தனது கட்டுரையில் எதிர்க்கிறார்.) தமது கைச்சரக்குகளை இடையிடையே கட்டுரைக்குள் செருகியுள்ளது. நிலப்பிரபுத்துவம் இல்லை என்பதை வலியுறுத்துவதற்காக, பிலிப்பைன்ஸின் நிலப்பிரபுத்துவம் கூட வெறும் 'இராஜகாரிக' முறையாகிவிட்டது.

மூலக்கட்டுரையில் செருகப்பட்டவை தமக்குவசதியாக அழுத்தம் கொடுத்தவை திரிக்கப்பட்டவை போன்றவற்றை அடிக்கோடு காட்டியுள்ளோம்.

- இலக்கு -

# பிலிப்பைன்ஸ் மாணவர் இயக்கம்: வரலாற்றுக் குறிப்புகள்

-பி. என். அபினலெஸ்-

இன்று ''மாணவர் இயக்கம்'' என்ற பதம் பொதுவாக சமுதாய மாற்றமும் முன்னேற்றமும் சம்பந்தப்பட்ட ஒரு பாரிய வெகுஜன இயக்கத்தின் பகுதியாகவே கருதப்படுகின்றது. சில சமயங்களில் சமுதாயத்தின் ஒரு பிரிவான மாணவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளை விண்ணப்பித்த போதிலும், இது குறுகிய கல்வித்துறை எல்லைகளைக் கடந்து, பரந்த சமுதாயத்தின் சமூக,' அரசியல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் ஓர் அரசியல் இயக்கமாகும். 60 களின் நடுப்பகுதி முதல் பிலிப்பைன்ஸ் மாணவர் இயக்கம் ஓர் ஆற்றலுள்ள அரசியல் சக்தியாக மாறியுள்ளது.

பொதுவாக சமுதாய விடுதலை பற்றிய பிரச்சினைகளை முன்வைக்கும் அதேசமயம், மாணவர் இயக்கம் இயக்கத்துக்குள் ஓர் இயக்கம் என்ற வகையில் அதற்கே உரித்தான சிறப்பியல்பையும் பெற்றுள்ளது. மாணவர்கள் அறிவியல், உயர்கல்விக் கேந்திரங்களின் சிருஷ்டிகளாக விளங்குவதால் மாணவர் இயக்கம் என்பது ஒரு கலாசார சித்தாந்த இயக்கமாகும். இந்த இயக்கத்தில் பங்குபற்றும் ஒரு மாணவன் அறிவையும் ''விமர்சனரீதியான'' சிந்தனையையும் பெற்றிருக்கிறான். அவை அவனை ஒரு சமுதாய அமைப்பின் தலைசிறந்த விமர்சகனாக மட்டுமல்ல, இன்னும் முக்கியமாக ஓர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்க் - கலாசாரத்தை முன்வைக்கும் தலைமைச் சக்தியாகவும் உருவாக்குகின்றன. கலாசார எதிர்ப்பின் உற்சாகிகளாகவும் ஓர் எதிர்க் கலாசாரத்தை பரப்புபவர்களாகவும் மாணவர்கள் வகிக்கும் அடிப்படைப் பாத்திரத்தின் விளைவாக இருப்பதால், அவர்கள் பிரசாரகர்களாக மாறுகின்றனர்.

## 50 களில் பிலிப்பைன்ஸ் அனுபவம்

பழைய ஸ்பானிய சகாப்தத்தில் மாணவர் ''இயக்கம்'' ஒருவர் என்ன கூறினலும், அது ஓர் அரசியல் இயக்கமாக வளர்ச்சியடையவில்லை. சீர்திருத்த இயக்கத்தின் தலைமைப் பேர்வழிகள், நவிவுவாதத்தின் ஆதரவாளர்களுக்கு எதிராக ஸ்பானிய பாராளுமன்றத்தை நிர்ப்பந்திப்பதன் மூலமும் ஸ்பானியாவில் ஒரு பிரசார யுத்தத்தை நடத்துவதன் மூலமும் ஒரு காலனி சமுதாயத்தில் சீர்திருத்தங்களை விரும்பிய மாணவர்களே ஆவர். மாணவர் இயக்கத்தின் படிப்பாளி இயல்பும் குறுகிய நோக்குடைய கோரிக்கைகளும் அது 1896 புரட்சிகர மாற்றத்தின் ஓர் அங்கமாக மாருமல் தடுத்துவிட்டன. இருந்தும் அது நடத்திய பிரசாரமும், ஆதரித்த சித்தாந்தமும் சிந்தனரீதியில் புரட்சியை வழிநடத்த உதவின இதில் வேடிக்கை என்னவென்ருல் அந்த பிரபலஸ்தர்கள் அப்படிச்செய்ய எண்ணியதே இல்லை. இதில் ஆயுதம் ஏந்துவது அவசியம் என உணர்ந்தவர்கள் ஒன்றில் மார்செலோ எச் டெல் பிலார் போல வறுமையில் மடிந்தார்கள். அல்லது புதிய காலனி எஜமான்கள் அங்கீகரித்த புரட்சியில் சேர்ந்தார்கள் அவர்களுக்கு எல்லாம் தலைமைதாங்கிய றிஸால் ஆயுதப் போராட்டத்தின் காரணத்தை உணராமலே செத்து மடிந்தார்.

அமெரிக்க காலனி சகாப்தம், காலனி-எதிர்ப்புப் போராட்டம் நிரூபித்தது போல தத்துவமும் நடைமுறையும் ஒன்றிணைவதை தடுத்துவிட்டது. புரட்சியானது (றிஸாலுக்குப் பிந்திய பிரபலஸ்தர்கள் வகுத்துக் காட்டிய அதன் முற்போக்கான வடிவத்தில்) தாராளவாத சித்தாந்தத்தினதும் (வெகுஜனங்களின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட) நடைமுறையினதும் ஐக்கியத்தை ஆதாரமாக்கிய அதே சமயம், யதார்த்தத்தில் ஓர் உறுதியான சேதன உருவத்தைப் பெற அது தவறிவிட்டது. ஏனென்ருல் அந்த பிரபலஸ்தர்கள் அதிலிருந்து பின்வாங்க, புதிய காலனிவாதிகள் அதை அழித்துவிட்டனர். காலனி காலக் கல்வியானது பின்னர் பிலிப்பைன்ஸ் நடுத்தரவர்க்கத்தை வசப்படுத்தி, இறுதியில் பிலிப்பைன்ஸ் சிந்தனையை புநருருவாக்கும் மிகச் சக்திவாய்ந்த கருவியாக மாறிவிட்டது.

கல்வி அமைப்பை அமெரிக்கா கட்டுப்படுத்தியதன் காரணமாக, சீர்திருத்த இயக்கம் முதல் மாணவர்கள் நடத்திய விமர்சனரீதியான சகபாடிவாத பிரசாரங்கள் ஒரு காலனி மனேபாவத்தால் தோற்கடிக்கப்பட்டன. றிஸாலின் படைப்புகளில் விளக்கப்பட்டுள்ள தாராளவாத சிந்தனையின் சீர்திருத்த இயல்பானது ''சமாதான'' மார்க்கங்களில் சுதந்திரத்தை பெறும் முறையில் திசைமாற்றப்பட்டு, வசதியான காலனிப்பகுத்தறிவுவாதத்தின் பகுதியாக மாற்றப்பட்டுவிட்டது. காலனி மக்களுக்கு காலனி-யந்திரம் திறந்துவிடப்பட்டமை அரசியல் ஆதிக்கத்துக்கு ஒரு படிக்கல்லாக கல்வியின் உபயோகத்தை மாற்றியமைத்து, பலப்படுத்தி விட்டது.

இவ்வாறு மாணவர் அரசியலானது 1920 கள் முதல் கலைத்துறை அக்கறையோடு மட்டும் கட்டுப்பட்டு நிற்கவில்லை; மாருக காலனி-அரசியலில் பங்குபற்றும் ஒருவரின் தலைமைத்துவ ஆற்றல்கள் புகழப்படும் தேசிய அரங்கிற்குள் ஊடுருவவும் ஊக்கிவிட்டது.

1930களில் பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழக மாணவர்கள் ஜனதிபதி மனுவேல் குவேஸோனின் தனி-மனிதன் ஆட்சி எழுவதற்கு அஞ்சி, இரு-கட்சி அமைப்பை மீட்பதற்கு உதவியாக பிலிப்பைன்ஸ் இளைஞர் கட்சியை ஸ்தாபித்தனர். புலமைமிக்க வென்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செஸ்லாவோ வின்ஸோன் என்பவரின் தலைமையில் இளைஞர் கட்சி குவேஸோன் நிர்வாகத்துக்கு எதிராக ஒரு விமர்சன பாத்திரத்தை வகித்தது. ஆனால் தேர்தல் போட்டிகளில் அது மண்கவ்வி விட்டது. இரண்டாவது உலக யுத்தம் பொது நல அமைப்பில் ஒரு நேரடி அரசியல் பாத்திரத்தை நடிக்கும் இந்த கற்பனாவாத முயற்சிகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது.

மாணவர்கள் அரசியலில் கலந்துகொள்ளும் இயல்பு யுத்தத்தின் பின் மாறவில்லை. புதிய சுதந்திர பிலிப்பைன்ஸ் அரசில் யௌவன "லட்சியவாதம்" அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தொடர்ச்சியான தலையீட்டுக்கு இரையாகியது. மக்சேசே அதிகாரத்தின் உச்சிக்கு ஏறும்போது அமெரிக்க மத்திய உளவு நிறுவனம் (CIA) வகித்த பாத்திரம் உலகம் அறிந்ததே. மாநாட்டு பிரதிநிதிகள் சங்கம் (Conda), தேசிய மாணவர் சங்கம்போன்ற மாணவர் கூட்டணிகள் மக்சேசேயை ஜனாதிபதி இயக்கத்துக்காக உருவாக்கி, "சுதந்திரமான, நேர்மையான" தேர்தல்களை உத்தரவாதம் செய்வதற்கு ஒரு சங்கத்தை நிறுவி, நவ காலனித்துவத்தின் கையாட்களாக மாறின.

இருந்தும் இந்தக் காலகட்டத்தில் கல்வித்துறையில் புதிய முரண்பாடுகள் முளைத்தன. இவை பின்னர் மாணவர் அரசியலை மாற்றியமைத்தன. இந்த முரண்பாடுகள் கல்வித்துறையில் திருச்சபையினதும் அரசினதும் "தலையீட்டுக்கு" எதிராக ஒரு தாராளவாத போராட்டவடிவை மேற்கொண்டன. இருந்தும் இது பிலிப்பைன்ஸ் பல்கலைக் கழகத்தோடு மட்டும் கட்டுப்பட்டு நின்றது.

அரச பல்கலைக்கழகத்தில் தாராளவாதம் இந்த முரண்பாடுகள் பலமடைந்து வெளிப்பாடு காணும் ஒரு சூழ்நிலையை வழங்கியது. கத்தோலிக்க திருச்சபையின் சுறுசுறுப்பான ஊடுருவல் அரச பல்கலைக்கழகத்தின் தாராளவாத தத்துவத்துக்கு எதிராக சென்றது.

பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தில் மதவாதிகளுக்கும் தாராளவாதிகளுக்கும் இடையிலான மோதல், பிதா டெலனேயால் தூண்டப்பட்ட பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழக மாணவர் கத்தோலிக்க செயற்குழு (Upsca), பல்வேறு தலைமைச் சகோதரக் குழுக்களின் உறுப்பினர்கள் என்ற மிக ஆதிக்கம் பெற்ற இரண்டு குழுக்களுக்கு இடையிலான ஒரு சிறு சச்சரவாக தொடங்கியது. இந்த ஸ்தாபனங்களின் சமாதான சகவாழ்வு வணக்கத்துக்குரிய பிதா அவர்கள் சகோதரத்துவ முயற்சிகளில் நிலவும் பௌதிக ரீதியான மிருகத்தனத்தைத் தாக்க "மத பீடத்தை பாவித்ததும்" உடைந்துவிட்டது. பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழக மாணவர் கத்தோலிக்க செயற்குழு பின்னர் ஆதிக்கமுள்ள வளாகச்சகோதர நிறுவனங்களுக்கு எதிரான அபேட்சகர்களை நிறுத்துவதன் மூலம் இப் பிரச்சினையை மாணவர் அரசியல் மட்டத்துக்கு உயர்த்திவிட்டது.

அதே காலத்தில் மக்காதே பிரகிருதிகள் கல்விக் கூடங்களில் "சதிகாரர்", "கம்யூனிஸ்டுகள்" ஆகியோருக்கு எதிராக நரவேட்டை ஒன்றை நடத்தினர். பிலிப்பைன்ஸ் விவசாய யுத்தங்கள் பற்றி சர்ச்சைக்குரிய கட்டுரை ஒன்றை வெளியிட்ட "பிலிப்பைன்ஸ் சமூக விஞ்ஞான, மானிடவியல் நோக்கு" சஞ்சிகையின் ஆசிரியரும், "பிலிப்பினீஷியன்" இதழில் மாணவ ஆசிரியர்களும் திருச்சபை உறுப்பினர்களால் குற்றவாளிக் கூண்டுகளில் நிறுத்தப்பட்டனர்.

கல்விக்கூடங்களுக்கு உள்ளும் புறமும் இருந்துவந்த திருச்சபைத் தாக்குதல்கள் மாணவர்களையும் கலைத்துறைக் குழுக்களையும் "தலையீடுகளுக்கு" எதிராக ஒரு பொது நிலைப்பாட்டில் ஐக்கியப்படுத்த உதவின. தாராளவாதிகள், தீவிரவாதிகள் போலித்தீவிரவாதிகள், (Fratmeu), "சுதந்திரசிந்தனையாளர்கள்", சக்தடியாளர்கள் ஆகியோரின் இந்த "ஐக்கிய முன்னணி" பல்கலைக்கழகத்தின் கல்விச் சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக நின்று, திருச்சபை, அரசு இரண்டினதும் தலையீடு இல்லாமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிவு, ''உண்மை'' இவற்றின் உரிமையை வலியுறுத்தியது.

இந்த திருச்சபை- தாராளவாதிகளின் மோதல்கள் பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழக வளாகத்துக்கு அப்பால் இடம்பெற்றன. இறுதியில் தேசிய மாணவர் சங்கங்கள் எல்லாம் இம் மோதலில் சம்பந்தப்பட்டன. இச் சங்கங்களில் சகோதரத்துவ வாதிகளும் தாராள வாதிகளும் செலுத்தும் ஆதிக்கத்தை ஆட்சேபித்து, பல்வேறு பள்ளிகளையும் சேர்ந்த மாணவர் கத்தோலிக்க செயற்குழுக்கள் அவற்றிலிருந்து வெளியேறி, பிலிப்பைன்ஸ் தேசிய மாணவர் யூனியனை (NUSP) அமைத்தன.

## பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழக மாணவர் கலாசார சங்கமும் தேசியவாதத்தின் எழுச்சியும்

மறைப்புவாதத்துக்கு எதிரான போராட்டத்தோடு கல்வித்துறையில் தேசிய உணர்வை மீட்கும் அவசியத்தை அங்கீகரிக்கும் மாணவர் குழு ஒன்று பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தில் மதகுரு- எதிர்ப்புவாதிகள் மத்தியிலிருந்து தோன்றியது. இம் மாணவர்கள் பிரதானமாக புத்திஜீவிகள் மத்தியில் ஜனரஞ்சகமாக வளர்ந்துவரும் றெக்டோனியன் (Rectonian) தேசியவாத செல்வாக்கினல் பாதிக்கப்பட்டார்கள். இந்த தேசியவாதம் நாட்டின் பொருளாதாரம் பிலிப்பைன்ஸின் கட்டுப்பாட்டில் வருவதை ஆதரித்து, அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்தது. இது ஒரு ''மதசார்பற்ற கட்சி சார்பற்ற'' மாணவர் ஸ்தாபனமான பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழக மாணவர் கலாசார சங்கம் (Scaup) தோன்றுவதற்கு வழிகோலியது. ஆங்கிலப்பகுதியின் உதவி விரிவுரையாளர் ஜோஸ் மரியாசிஸோன் என்பவர் அதன் முதலாவது தலைவர் ஆவர்.

இந்த மாணவர் கலாசார சங்கம் பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தில் தேசியவாதக் கருத்துகளைப் பரப்புவதற்கு பொறுப்பாக இருந்தது. இருந்தும் அதன் தேசியவாதம் பிலிப்பைன்ஸ் கலாசாரத்துக்கு மதிப்பும் ராணுவத்தளங்களுக்கு எதிர்ப்பும் உடையதாக அமைந்தது. 60களின் ஆரம்பகால கலைக்கழக உறுப்பினர் நிலையிலிருந்து பார்த்தால், இச் சங்கம் அமெரிக்க தளங்கள் சம்பந்தமான கருத்தரங்குகளை ஊக்கமாக கூட்டியதோடு, பல்கலைக்கழகத்தில் அரங்கேற்றங்கள் நிகழ்த்துவதற்கு பயனிஹான் நடனக்குழுவையும் அழைத்தது. மூன்று வருடங்களுக்கு பின், இச் சங்கத்தின் (Scaup) தேசியவாதம் பாரதூரமான அரசியல் மார்க்கங்களில் வளர்ச்சியடைந்தது.

வியட்நாம் யுத்தத்தில் பிலிப்பைன்ஸ் பங்குபற்றியது இச்சங்கம் பாரதூரமாண அரசியல் நிலைப்பாட்டை எடுப்பதற்கு தூண்டிய பிரச்சினையாகும். பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழக மாணவர் கவுன்சிலுடன் சேர்ந்து இந்த சங்கம் கண்டனக் கூட்டங்களை நடத்தியது. ஆனல் இத்தகைய ஒரு பாரிய பிரச்சினையை தீர்ப்பதற்கு தேசியரீதியிலான ஒரு பங்குபற்றல் அவசியமாகப்பட்டது. இத்தகைய ஒரு ஆட்சேப இயக்கம் சமுதாயத்திலுள்ள பல்வேறு பகுதிகளையும் பங்குபற்றும்படி அறைகூவல் விடுக்கவேண்டும். இக் கலாச்சார சங்கம் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பல்கலைக்கழக நிறுவனமாகவே தோன்றியது. இதற்கு தேவையானது என்ன வென்றால், தேசியரீதியில் வியாபகமான ஒரு மாணவர்- வாலிபர் ஸ்தாபனமாகும். அத்துடன் அது நன்கு வரையறுக்கப்பட்ட தேசியவாத நோக்குடன் பிலிப்பைன்ஸ் சமுதாயத்தை அணுகி, ''ஜனநாயக மாற்றங்களுக்கு'' போரிடக்கூடியதாக இருக்க வேண்டும். பின்னர் இந்த நிறுவனம் தேசியத்துக்கும் ஜனநாயகத்துக்குமான போராட்டத்தில் வாலிபர்களின் முன்னணிப்படையின் பாத்திரத்தை வகிக்கவேண்டும்.

1964 அக்டோபர் 2ந் தேதி லோறல்-லாங்கிள் உடன்படிக்கையை ஆட்சேபித்து மலகனுங்கிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு முன் பலதுறை- ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இது தேசிய போராட்ட வளர்ச்சியில் ஒரு மைல் கல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாக அமைந்தது. ஒரு மாதத்துக்குப் பின், கபட்டான் மக்கபயான் (Kabataan Makabayan – தேசியவாத இளைஞர் இயக்கம் KM) தோன்றியது.

## தேசியவாத இளைஞர் இயக்கமும் (*KM*) தீவிர தேசியவாதமும்,

*1964* நவம்பர் *30*ல் கலாசார சங்கத்தின் (SCAUP) முன்னாள் தலைவர் ஜோஸ்சிஸோனும் சில உறுப்பினர்களும் கிறிஸ்தவ இளைஞர் சங்க (YMCA) மண்டபத்தில் கூடி தேசியவாத இளைஞர் இயக்கத்தை (KM) அங்குரார்ப்பணம் செய்தனர். தமது அங்குரார்ப்பண உரையில் சிஸோன் பிலிப்பைன்ஸ் சமுதாயத்தை எதிர்நோக்கியுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் என்ற இரண்டு அடிப்படைப் பிரச்சினைகளை வரையறுத்துக் காட்டினார் அவரது கூற்றின் பிரகாரம், "இந்த இரண்டு பிரச்சினைகளும் தான் முழுத் தேசத்தையும் வாலிபர்களையும் பீடித்துள்ள வறுமை, வேலையின்மை, கல்விப் பற்றுக்குறை, ஆரோக்கியமின்மை, குற்றங்கள், ஒழுக்கக் கேடுகள் ஆகியவற்றுக்கான மூலகாரணங்கள் ஆகும். தமது மக்களோடு இளைஞர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் நிலப்பிரபுத்துவத்தினதும் அக்கிரமங்களால் துன்புறுவது மட்டுமல்ல, அவற்றால் இளைஞர்கள் தான் முதலில் பாதிக்கப்படுகிறார்கள் (Sison "Struggle for National Democracy & 18)

தமது இரண்டு பிரச்சினைகளையும் பிலிப்பைன்ஸ் சமுதாயத்திலுள்ள வர்க்க முரண்பாடுகளையும் பூரணமாகப் புரிந்து கொள்வது இளைஞர்களின் கடமை என்று சியோன் கூறினார். சமுதாய யதார்த்தங்களை தெளிவாக புரிந்து கொள்வதை துரிதப்படுத்துவதற்கும் சுரண்டப்பட்ட அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களை சார்ந்து நிற்பதற்கும் பிலிப்பைன்ஸ் இளைஞர்களின் முன்னணி ஸ்தாபனமாக தேசியவாத இளைஞர் இயக்கம் (KM) தலைமை தாங்கி சேவை செய்ய வேண்டும். (பெரும்பான்மையான பிலிப்பைன்ஸ் வாலிபர்கள் தோன்றிய) தொழிலாளர்கள், விவசாயிகள் "சிறு உடைமைச் சொந்தக்காரர்கள், மாணவர்கள், புத்திஜீவிகள், உத்தியோகத்தர்கள், ஆகியோரைக் கொண்ட குட்டி முதலாளி வர்க்கம்,"(பிலிப்பைன்ஸ் முயற்சியாளர் வர்த்தகர்களைக் கொண்ட) "தேசிய முதலாளி வர்க்கம்" அனைவரையும் ஐக்கியப்படுத்துவதில் பங்குபற்றுமாறு அவர் வாலிபர்களுக்கு அறைகூவல் விடுத்தார். "ஏகாதிபத்தியத்தினதும் நிலப்பிரபுத்துவத்தினதும், ஆதிக்கத்தை அடியோடு ஒழித்துக் கட்டக் கூடிய தேசிய ஜனநாயகத்திற்கான ஒரு உறுதியான முன்னணிக்குள் வேறுபட்ட இந்த குழுக்கள் எல்லாவற்றையும் ஒற்றுமைப்படுத்துவதாகும். இது "வாலிபர்கள் வாகை சூடுவதற்காக வெகுஜனங்களுடன் தம்மைத்தாமே இணைத்துக் கொள்ள வேண்டும்."

சிஸோனின் அங்குரார்ப்பண உரை அதிகார முதலாளித்துவத்தையும் பாஸிசத்தையும் தொடவில்லை. *60*களில் தோன்றிய (விவசாயிகள் பகுதியின் மசாகா (MASAKA போன்ற) தேசியவாத நிறுவனங்கள் மக்கபகல், மார்க்கோஸ் நிர்வாகங்களை எதிர்க்காத நிலைப்பாட்டை மேற்கொண்ட இதற்கு காரணமாக இருக்கலாம். *60*களின் இறுதிக்காலத்தில் தான் தீவிர தேசியவாத இயக்கமானது பிலிப்பைன்ஸ் அரசை "ஏகாதிபத்தியத்தினதும் நிலப்பிரபுத்துவத்தினதும் கருவியாக கருதத் தொடங்கியது. இதற்கு முன், தேசியவாத ஸ்தாபனங்கள் இயக்கத்திலுள்ள நேச அணிகள் உறுதியான அடிப்படையை இன்னும் பெற்றுக் கொள்ளாத காரணத்தால் பிலிப்பைன்ஸ் அரசின் இயல்பை அம்பலப்படுத்துவதற்கு இன்னும் காலம் பக்குவமடையவில்லை என கருதின.

சகபாடிவாத பிலிப்பைன்ஸ் அரசியல் ஓரளவு விமர்சன அணுகு முறைகள் வாயிலாகவேனும், முன்னேற்ற நோக்கு (Progressive Review) இதழில் வெளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்த 1964 தேர்தல் பற்றிய தேசியவாத இளைஞர் இயக்கத்தின் (KM) அறிக்கையில் பிரதிபலித்தன. மக்கபகல், மங்கலபஸ் கட்சிகள் இரண்டையும் இயக்கம் தாக்கியது. மக்கபகல் கட்சியை ஊழல் நிறைந்தது, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடி என்றும் மங்கலபஸ் கட்சியை போலி தேசியவாத, போலி – ஜனநாயகக் கட்சி என்றும் அது கண்டித்தது. மூதவை தலைவர் மாக்கோசைப் பொறுத்தவரையில் 1965 ல் ஜனுதிபதி வேட்பாளராக வந்த அவரது விஞ்ஞாபனத்தில் தேசிய வாதத்தின் சாயல் தென்பட்டதால் ஒரு "காத்திருந்து பார்க்கும் மனோபாவத்தை இளைஞர் இயக்கம் கடைப்பிடித்தது. உப - ஜனுதிபதி, மூதவை அபேட்சகர்கள் சிலரைப் பற்றி அது "விமர்சன ரீதியான ஆதரவுக்கு அறைகூவல் விடுத்தது."

## 1967 பிளவுகள்

தேசியவாத இளைஞர் ஸ்தாபனத்தின் ஆரம்ப காலம் இளைஞர் இயக்கத்தின் (KM) நிலைப்பாட்டை பிரசாரம் செய்வதற்கு மட்டுமல்ல, ஸ்தாபனவிரிவாக்கத்திற்கு உகந்த பிரதேசங்களில் கிளைகளை நிறுவுவதற்கும் செலவிடப்பட்டது. இயக்கத்தின் (KM) முதற்கிளைகள் பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்திலும் (Lyceum) அமைக்கப்பட்டன. இத்தேசியவாத இயக்கம் பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழக கலாசார சங்கம் தொடக்கிய பணிகளை நிறைவு செய்து' முன்னெடுத்துச் சென்று விறுவிறுப்பாக விருத்தியடைந்தது. அதைவிட, பெட்ரும் றஸல் சமாதான நிறுவனத்தின் பிலிப்பைன்ஸ் கிளையான (BRPE) ஒரு புதிய குழுவும் இளைஞர் இயக்கத்தில் (KM) அதன் அங்கத்தவர்களை தொடர்புபடுத்த இசைந்தது. கலைக்கழகத்தில் இயக்கத்தின் (KM) வளர்ச்சி அக்கழகத்தின் சொந்தக்காரர்களான போறல் குடும்பத்தின் "தேசியவாதத்தால்" முடுக்கி விடப்பட்டது. இன்னும் முக்கியமான காரணம், சிஸோன் போன்ற இயகக்த்தின் (KM) தலைவர்கள் கழகக் கலைப்பிரிவு போன்ற உறுப்பினர்களாக இருந்ததாகும்.

ஆண்டு இறுதியில், தேசியவாத இளைஞர் இயக்கத்தின் (KM) குழுக்கள் கிராமப்புறத்திலும், சிறப்பாக மத்திய லுஸோனிலும் ஸ்தாபிக்கப்பட்டு, விவசாய இளைஞர்களையும் அதன் அரவணைப்புக்குள் கொண்டு வந்தது.

மூன்று வருடங்களுக்கு பின், இயக்கம் அதன் முதலாவது ஸ்தாபன நெருக்கடியைச் சந்தித்தது. அது விவசாய இளைஞர்களுக்கும் கல்லூரி - நகர வாலிபர்களுக்கும் இடையில், அதே போல நகர இயக்கத்துச்குள்ளும் (Rae) பிளவை ஏற்படுத்தியது.

60 களின் நடுப்பகுதியில், இவ் இயக்கம் (KM) தேசியவாத முன்னேற்றத்துக்கான இயக்கமான (MAN) முதலாவது தேசிய கூட்டணியின் ஒரு உறுப்பு நிறுவனம் ஆகியது. அது தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு பல – பிரிவினர் இயக்கமாக திகழ்ந்தது. அதன் பாத்திரம் சமுதாயத்தில் தேசியவாதத்தை பரவச் செய்து, ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்த்து போரிடுவதாகும்.

தேசியவாத முன்னேற்றத்திற்கான இயக்கம் (MAN) தோன்றியது. பிலிப்பைன்ஸ் தேசியவாத வளர்ச்சியில் ஒரு புதிய கட்டத்தை குறிக்கிறது. அது அங்கிருந்த தேசியவாத நிறுவனங்கள் அனைத்தையும் ஐக்கியப்படுத்தவும், தேர்தல்– அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் பாரம்பரிய கட்சிகளுக்கு சவால்விடக் கூடிய சட்ட ரீதியான மக்கள் கட்சி ஒன்றை அமைக்கவும் வழிசமைக்க வேண்டியிருந்தது. இருந்தும், அது (MAN) கூட தேசியவாதிகளுக்கும் முற்போக்கு வாதிகளுக்கும் இடையிலான கோஷ்டிச் சண்டைகள், ஸ்தாபனப்பிளவுகளால் குழப்பம் அடைந்தது. சித்தாந்த அல்லது அரசியல் வேறுபாடுகளிலும் பார்க்க ஸ்தாபனச்சச்சரவுகளும் தனிநபர் வேற்றுமைகளும் தான் தேசியவாத முன்னேற்றத்துக்கான இயக்க (MAN) உறுப்பினர் மத்தியில் மோதல்களுக்கு காரணமாய் இருந்தன. பிலிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பைன்ஸ் முற்போக்கு இயக்கமானது உலகின் இதர பாகங்களிலுள்ள முற்போக்கான அரசுகள் மத்தியில் ஏற்கெனவே தோன்றியிருந்த வேறுபாடுகளை இன்னும் மதிப்பீடு செய்துகொள்ளவில்லை. சில பகுதி வெகுஜன ஸ்தாபனங்கள் தேசியவாத இளைஞர் இயக்கம் (KM) "துணிச்சல்வாத" கொள்கையை கடைப்பிடிப்பதாக குற்றம் சாட்டின. அப்பிளவு இறுதியில் மோசம் அடைந்தது. வருட நடுப்பகுதியில் இயக்கம் (KM) இரண்டாகப் பிளவுபட்டது.

விவசாய பகுதியை சேர்ந்த (MASAKA) உறுப்பினர்கள் நாட்டுப் புறங்களிலிருந்த இளைஞர் இயக்க (KM) குழுக்களிலிருந்து தமது பிள்ளைகளை வெளியே எடுத்து பிலிப்பைன்ஸ் மலாயாவ் பக்ககைஸா பட்டால் (MPKP) என்ற நிறுவனத்தை உருவாக்கினர். இது இளைஞர் இயக்கத்தின் (KM) கிராமிய வெகுஜன அடிப்படையை இல்லாமல் செய்தது. மறுபுறம் அதன் தலைமை "முற்போக்கு நோக்கு" இதழில் வெளியான கட்டுரை ஒன்றில் சிஸே னை எதிர்த்த சில உறுப்பினர்களை வெளியேற்றியது.

இந்த ஸ்தாபன நெருக்கடியானது இளைஞர் இயக்கத்தில் (KM) ஏற்பட்ட இன்னொரு பிளவால் மேலும் மோசமாகியது. அதனுடைய இரண்டாவது காங்கிரசில், பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழக மாணவர் கலாசார சங்கத்தின் முன்னாள் உறுப்பினர்களின் தலைமையிலான ஒரு குழு சிஸோன் மீது "அதிகார வாத" குற்றச்சாட்டை சுமத்தியது. அத்துடன் இளைஞர் இயக்க (KM) தலைமைப்பீடத் தேர்தல்களிலும் அவருக்கும் அவரது அபேட்சகர்களுக்கும் எதிராக சவால் விட்டார். ஆனால் அவர்கள் தோற்றுப் போயினர். இது பிரிவினைக் குழுவினை வெளியேற்றும்படி செய்துவிட்டது. அவர்கள் சமகன் டெமொகிறட்டிக் கொங்க பட்டான். (SDK) என்ற கட்சியை நிறுவினர்.

இந்தப் பிளவுகள் தேசியவாத இளைஞர் இயக்கத்தின் அத்திவாரத்தையே அழிப்பதாக அச்சுறுத்தியது. இயக்கத்தைப் பொறுத்தவரையில், அது ஒரு சில அங்கத்தவர்களை இழந்தது. அதேவேளையில் மாணவர் மத்தியிலிருந்து உறுப்பினரைச் சேர்க்கும் புதிய ஸ்தாபனங்களுடன் "போட்டியிட" வேண்டியிருந்தது. பிலிப்பைன்ஸ் மலயாவ் பக்கைஸா கட்சி (MPKP) நாட்டுப்புற மக்களுடன் இணைவதில் முன்னேற்றம் அடைந்தது. போட்டியிடும் நகர-இளைஞர் ஸ்தாபனமான சமகான் டெமோக்கிரட்டிக் கொங் கட்சி (SDK) கல்வி நிலையங்களில் இளைஞர் இயக்கத்துடன் (MK) போட்டியிட்டது. உண்மையில் அடுத்து நிகழ்ந்த தேர்த்தலில் சமகன் டெமொக்கிரட்டிக் கொங் கட்சி இளைஞர் இயக்கத்தைப் போல ஒரு முக்கியமான பாத்திரத்தை வகித்தது.

இன்னும் இந்தப் பிளவுகள் இளைஞர் இயக்கத்திற்கு சாவுமணி அடிப்பதற்குப் பதில் ஓர் ஆசீர்வாதமாகவே அமைந்தது. பிளவு ஏற்பட்டு, மலயாவ் பக்க கைஸ கட்சி (MPKP) ஸ்தாபிக்கப்பட்டதுடன், போராட்டம் என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு, பிரபுத்துவ- எதிர்ப்புப் பிரச்சனைகளோடு கண்டிப்பாக நின்றுவிடவேண்டும் என நம்பிய உறுப்பினர்களை வால்பிடிப்பதிலிருந்து இளைஞர் இயக்கத்(KM) தலைமை விடுதலை பெற்றது. அந் நிலமை தற்பொழுது பிலிப்பைன்ஸ் நவ-காலனி நிலைமையை ஊக்கத்துடன் ஆராயத்தயாராயுள்ளது.

* ♦ *



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒலியின் "மொழி பெயர்ப்பு"

# பிலிப்பைன் நாட்டு மாணவர் இயக்கம்

(வரலாற்றுக் குறிப்பு) —P. N. Abinales

தற்போது 'மாணவர் இயக்கமானது, சமூக மாற்றத்துக்கும் அதன் முன்னேற்றத்திற்கும் உரியதென்று பொதுவாகப் பேசப்படுகிறது. மாணவர் நலன்களைப் பாதிக்கும் எந்தவொரு நடவடிக்கைக்கும் எதிராகக் கிளர்ந்தெழும் 'மாணவர் அமைப்புக்கள்' கல்வியோடு சம்பந்தப்பட்டவற்றுக்கு மட்டுமென்று குரலெழுப்புவதில்லை. தாம் வாழும் சமுதாயத்தையும், அதன் பொருளாதார விரிவுகளையும், விடிவுகளையும் நசுக்க எடுக்கும்எல்லா நடவடிக்கைகளையும் எதிர்த்து வீறுநடை போடுகின்றது. மாணவர் அமைப்புகளின் உக்கிரமமான போராட்டங்கள் 1960களிலேயே முழுவடிவெடுத்தன.

[மாணவர் இயக்கங்கள் தம்மை எதிர்நோக்கும் கல்வியோடு சம்பந்தப்பட்ட போராட்டங்களில் ஒரு இயக்கமாக நின்று போராடி வருகின்றபோதும், நாட்டை, நாட்டின் மக்களை அல்லது அவர்களது பொருளாதாரத்தை வேரறுக்கும் எந்த ஊடுருவலையும் தகர்த்தெறிய இயங்கிவரும் எந்தவொரு இயக்கத்துள்ளும் இணைந்து அல்லது ஊடுருவி அல்லது உட்பட்டு தமது பங்கை ஆற்றிவரத் தயங்குவதில்லை.]

(அழுத்தம்-ஒலி)

மாணவர்கள் சிந்தனை வளங்கொண்ட அறிவுக்கூர்மையுள்ள சமுதாயத்தின் உயிர்த்துடிப்புள்ள இளைஞர்களாக இருப்பதால், சமூகத்தின் பல முக்கியமான அம்சங்களில் பங்கெடுக்க உரிமையுள்ளவர்கள். மாணவர்கள் வளர்ந்துவரும் அதே நேரத்தில், மாற்றமடைந்து கொண்டு செல்லும் கலாச்சாரத்தைச் சரியான திசையிலிருந்து விமர்சிக்கும் தகுதிபெற்றவர்கள். அவர்கள் புத்திஜீவிகளான ஒரு சமூகத்தை - மாணவ சமூகத்தைப் பிரதிபலிப்பவர்களாக இருத்தலால் தமது கடமையை ஒழுங்காகவும் ஆழ்ந்த சிந்தனையின் அடிப்படையிலும் செய்வதுடன் விளக்கி நியாயப்படுத்தி ஏற்றுக்கொள்ளவும் செய்வார்கள்.

இஸ்பெயின் ஆட்சிக்குக் கீழ் பிலிப்பைன்ஸ் இருந்த காலத்தில் ஒரு மாணவர் இயக்கம் இருந்ததாயினும், [அரசியல் ஆர்வமுள்ளதொன்றாக அது இருக்கவில்லை.]

(அழுத்தம் - இலக்கு)

ஆரம்பகால மாணவர் தலைவர்கள் இஸ்பானியாவிலிருந்து கொண்டே, பிலிப்பைன்ஸில் இஸ்பானிய அதிகாரத்திற்கு எதிராகப் பிரசாரத்தை மேற்கொண்டனர். இம் மாணவ தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட தூர திருஷ்டியற்ற சிந்தனையாலும், செயற்பாடற்ற முயற்சிகளாலுமே 1986-ல் மேற்கொள்ளப்பட்ட [புரட்சிகரமான மாற்றங்கள் தோல்வி பெற காரணமாயின.] ஆனாலும் இவர்கள் பிரசாரமும், சிந்தனை வெளிப்பாடுகளுந்தான் புரட்சிகரமான சிந்தனைகளுக்கு இடமளித்தன. ஆனால் அப்போதைய ஆயுதமேந்திய போராளிகள் தாம் ஆயுத மேந்தியதற்கான காரணங்கள் பற்றி எதுவுமே அறிந்து கொண்டிருக்காததால் வெற்றி பெற முடியவில்லை. றிசால் என்ற பிரபலமான போராளி கூட ஆயுதமேந்திய காரணத்தை தானே நன்கு விளங்கிக்கொள்ளாமல் மரணித்தான்,

குடியேற்றவாதத்திற்கு எதிரான போராட்டங்களின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் நன்கு தெரிந்துகொள்ள விடாது அமெரிக்க ஏகாதிபத்தியம் கவனமாகப் பார்த்துக்கொண்டது. புரட்சிகொள்கைகளையும் அதன் நடைமுறைச் செயற்பாடுகளையும் இணைத்தபோதும் அமெரிக்கக் கட்டுப்பாட்டிலிருந்த கல்வி முறைகளும் நவீன குடியேற்றவாதமும் மிக இலகுவாக மாணவர் இயக்கங்களைப் படிப்படியாக,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுதி பகுதியாக அழித்தொழித்தன குடியேற்றவாதத்தை அடிப்படையாகக் கொண்டு பிலிப்பைன்ஸில் திணிக்கப்பட்ட கல்வி முறையானது எந்தவிதமான முற்போக்குக் கொள்கையும் இலகுவில் நசுக்கி அழித்துவிடும். பலம் வாய்ந்த ஆயுதமாக நன்கு பயன்படுத்தப்பட்டது. சீர்திருத்த இயக்கம் தொடங்கிய காலத்திலிருந்து அமெரிக்கச் செல்வாக்குடனுன கல்வியமைப்புப் புகுத்தப்பட்டதால் அக் கல்வி பெற்ருேர் பலர் குடியேற்றவாதத்தின் அடிவருடிகளாக்கப்பட்டனர். றிசால் என்பவரது எழுத்துக்களால் கவரப்பட்ட சீர்திருத்தச் சிந்தனையாளர்கள், சுதந்திரம் சமாதான வழிகளால் மட்டுமே கிடைக்க வேண்டுமென்ற கருத்துக்கு உள்ளாக்கப்பட்டனர். தமது அரசியல் நோக்கத்தை வென்றெடுப்பதற்காக, குடியேற்றவாத ஆட்சியாளர் இப்படியான தந்ரோபாயங்களைக் கல்வி முறையூடாகச் செலுத்தி ஆரம்பகாலத்தில் சீர்திருத்தவாதிகளை முளையில் கிள்ளியெடுத்தனர்.

1920களிலிருந்து மாணவர்களின் அரசியலானது, கல்வியமைப்புகளுக்குட்பட்டதாக மட்டுமிருக்காமல் குடியேற்ற அரசியலிலும் பங்கு பெறுவதற்கான ஒரு தேசிய களமாகவும் சிலரை தலைமைத்துவத்திற்கு உருவாக்கும் சாதனமாகவும் உருப்பெற்றது. 1930ஐ தொடர்ந்து வந்த காலத்தில் ஒரு கட்சி ஆட்சிமுறைக்கெதிராகப் போராடி, இரு கட்சி ஆட்சிமுறையை ஏற்படுத்நப்பாடுபட்டனர். ஆனுலும் மாணவர் இயக்கங்கள் தேர்தலில் பங்கு பற்றிப் பெருந்தோல்வியடைந்தமை கவலைக்குரியது. கவனத்திற்குரியது. இருந்தாலும் 1939ஐ தொடர்ந்து வந்த உலக யுத்த நிலமை எந்தவொரு இயக்கத்தையும் வளரவிடாது தடுத்தது.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் கூட மாணவர்கள் தமது உற்சாகத்தையோ கொள்கைகளையோ கைவிடவில்லை. ஆனுல் ''இளமைக் கனவுகள்'' பலவும் அமெரிக்காவின் குடியேற்றவாதக் கொள்கையால் விழுங்கப்பட்டன. இக் காலகட்டத்தில் அமெரிக்காவின் உளவறியும் தாபனம் (C.I.A) இளைஞர்களின் இயக்கங்களை நசுக்குவதில் பெரும்பங்காற்றியது. மாணவர் அமைப்புக்களும் அதன் இணைப்புக்களும் நவகாலனித்துவத்தின் பிடிக்குள் சிக்குண்டு ஒரு ''நேர்மையான சுதந்திரமான தேர்தலுக்கு'' சந்தர்ப்பமளித்துச் சம்மதமளித்தன.

இக் காலத்தில் தான் மாணவ இயக்கங்களுக்கிடையே முரண்பாடுகள் தோன்றின. இதன் விளைவுகள் தான் ''மாணவர் அரசியல்'' என பின்னர் உருவாகியது. மாணவர் கல்வி அமைப்பில் அரசின் தேவையற்ற தலையீடுகளை தாராள மனதுடன் எதிர்க்கும் போராட்டமாக்க இம் முரண்பாடுகளும் உடன்பாடுகளும் உதவின.

அரசால் நடாத்தப்பட்ட சர்வகலாசாலைகளில் 'தாராண்மைவாதம்' இந்த முரண்பாடுகள் பற்றிய விவாதங்கள் வாயிலாகத் தோன்றின. ஆனுலும் கத்தோலிக்க மத ஊடுருவலின் விளைவாக இக் காலத்தில் தாராளக் கொள்கைக்குள் எதிர்த் தாக்கங்களை ஏற்படுத்தின. சிறிய விவாதங்கள் மூர்க்கத்தனமான முரண்பாடுகளாக உருவெடுத்து மாணவர் சங்கத் தேர்தலில் மாணவர் இயக்கங்கள் ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமாக போட்டியிடுமளவுக்குக் கீழ் நிலை அடைந்தது.

---

மாணவர்களுக்கிடையேயும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய இயக்கங்களுக்கிடையேயும் இருந்து வந்த நல்லுறவுகளை இவை நலிவடையச் செய்து நாசப்படுத்தின.

(இடைச்செருகல்)

---

இக் காலத்தில் பல்கலைக்கழகங்களிலும் ஏனைய உயர்கல்விக்கூடங்களிலும் ''கிளர்ச்சிக்காரர்களாகவும் கம்யூனிஸ்டுகளாகவும்'' மாணவர் அடையாளமிடப்பட்டு அவர்களுக்கெதிரான நடவடிக்கைகளில் அரசு இறங்கியது. மேலும் பிலிப்பைன்ஸின் பிரதான சஞ்சிகைகள் முரண்பாடுகளைப் பயன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பத்தி மாணவர்களுக்கும் விவசாயிகளுக்கும் பாதகமான கட்டுரைகளை வெளியிட்டு அவர்கள் நடவடிக்கைகளைச் சந்தி சிரிக்க வைத்தன.

இந்நிலைமை மாணவர் உலகைச் சிந்திந்துச் செயலாற்றவும் தமது இயக்கங்களை ஒற்றுமைப்படுத்தவும் கட்டாயப்படுத்தின

(இடைச் செருகல்)

தாராண்மைவாதிகள், தீவிரவாதிகள், கொள்கைவாதிகள், சுதந்திர சிந்தனையாளர்கள் சிறு பிரிவுகள், முரண்பாட்டாளர்கள் ஆகிய சகல மாணவ இயக்கங்களும், அரசும் கத்தோலிக்க திருச்சபையும். தமக்கெதிராகத் தொழிற்படும் பொது எதிரிகள் என்பதை உணர்ந்து அறிந்து ஒன்றுபட்டுச் செயலாற்ற முயன்றன.

உண்மையை அறிந்து கொள்வதிலும் அறிவைப் பெற்றுக்கொள்வதிலும் மாணவ சமுதாயத்திற்குத் திருச்சபையோ அரசசபையோ தடையாக இருக்கக் கூடாதென மாணவ இயக்கங்கள் உணர்ந்தன; உணர்த்தப் புறப்பட்டன.

மாணவர் தமக்கெதிராக முரண்பாடாக எழுதிய எல்லாவற்றிற்குமெதிராக தேசிய ரீதியாக ஒன்றுபட்டுக் குரல் கொடுத்தனர்.

(இடைச் செருகல்)

மாணவர் இயக்கங்கள் இதற்காக தேசிய இயக்கங்களாகவும் மாறின. தாராளவாதிகளுக்கெதிராகவும் சிறு சிறு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட குழுவினர்க்கெதிராகவும் அவர்களின் கட்டுப்பாடுகளுக்கெதிராகவும் பிலிப்பைன்ஸ் மாணவர் தேசிய பேரவை உருவாகியது.

தேசிய பொருளாதார அபிவிருத்திக்காகவும். ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும் மாணவ இயக்கங்கள் வளர்ந்து தேசிய அடிப்படையில் வேரூன்றி வியாபித்தது மக்களிடையேயும் அறிவாளிகளிடையேயும் பெருமதிப்பை ஏற்படுத்தியதுடன் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வயிற்றில் புளியைக் கரைத்து ஊற்றியது. அத்துடன் ''மாணவர் கலாச்சாரச் சம்மேளனத்தையும்'' தோற்றுவிக்க இது வழிகோலியது. இக்கலாச்சார இயக்கமானது பிலிப்பைன்ஸின் தேசிய கலாச்சாரத்தை மீட்டெடுக்கும் உயரிய பணியில் ஈடுபட்டதுடன் பிலிப்பைன்ஸின்மண் எந்த நாட்டினதும் இராணுவ தளமாவதை வீராவேசத்துடன் எதிர்த்து நின்றது. மாணவர் கலாச்சாரச் சம்மேளனமானது தமது எதிர்ப்பில் முக்கியமாக தமது மண்ணில் அமெரிக்கக் காலூண்டலையும் அமெரிக்கா வியட்நாமில் மேற்கொண்டுவந்த அநாகரிக ஆக்கிரமிப்பையும் தேசிய மாணவர் இயக்கத்துடன் சேர்ந்தும், தனித்தும் செய்து வந்தது. மாணவர் இயக்கமானது தேசியப் பிரச்சனைகளில் நாடு தழுவிய அளவில் ஈடுபடும் போது மக்களின் பல்வேறு பிரிவினரையும் குறிப்பாக இளைஞர்களையும் சேர்த்துக்கொள்ளல் வேண்டுமென்று இக்காலத்தில் கண்டு கொண்டது 1964 ஒக்ரோபரில், அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக சகல மக்கள் இயக்கங்களையும் உள்ளடக்கிய ஓர் 'எதிர்ப்புப் பேரணி' ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை அமெரிக்கக் கொள்கைகளுக்கெதிராக நடாத்தி அரசாங்கத்தைத் திகிலடைய வைத்ததுடன் தமது பலத்தையும் எடைபோட வைத்தது.

1964 நவம்பர் 30-ல் மாணவர் பேரவை தலைவர் மாசிசன் தொடக்கவுரையில் தம்மையும் பிலிப்பைன்ஸ் மக்களையும் இருபெரும் பிரச்சினைகளாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் உள்நாட்டு இராஜகாரிய முறைமைகளையும் விபரித்துக் கண்டித்தார். இவையிரண்டுமே பிலிப்பைன்ஸ் மக்களின் வறுமைக்கு, வேலையின்மைக்கு, கல்விக்குறைபாடுகளுக்கு, சுகாதாரக் கேடுகளுக்கு, குற்றச் செயல்களுக்கு, ஒழுக்கக்கேடுகளுக்கும் ஏனைய குறைபாடுகளுக்கும் காரணங்களென முன்மொழிந்தார். இதனால் மக்களின் சமத்துவம் கெட்டுப் போய்விட்டதென்றும் தேசிய பொருளாதாரத்தையும் மக்கள், மாணவர் மகிழ்ச்சிகளையும் பாதிக்கப்படுகின்றதென்று ஆதார பூர்வமாகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குற்றஞ் சாட்டினர். பிலிப்பைன்ஸ் (மக்கள் வர்க்கப் போராட்டத்தை நன்கு விளங்க வேண்டுமென்று வேண்டினர். சுரண்டப்படு பவர்கள் மீட்கப்பட்டு சமுதாய உண்மைகள் அம்பலப்படுத்தப்பட வேண்டுமெனவும் கேட்டிருந்தார். விவசாயிகளும் தொழிலாளிகளும் ஒன்றுபட்டுழைக்கவேண்டுமென்றார்.

(இங்கு இளைஞர்களின் அரசியலிலான பங்களிப்பு மறுக்கப்படுகிறது – ஒரு திரிப்பு– (இலக்கு)

பல குழுக்களும் இயக்கங்களும் இணைந்து உள்நாட்டு சிறுமுதலாளிகளையும் எதிர்த்து சுரண்டலையும் ஒடுக்குமுறைகளையும் ஒடுக்கி தேசிய வெற்றியை இறுதி நோக்கமாகக் கொண்டு தியாகப் போராட்டங்களை வழி நடத்த அறைகூவல் விடுத்தார். இளைஞர்கள் மாணவர்கள் மக்களுடன் இணைந்து போராட்டங்கள் நடத்துவதை வலியுறுத்தினர். மார்க்கோஸ் சம்பந்தப்பட்ட வகையில் 1965 மாணவர் தேசிய இயக்கம் ''பொறுத்துப் பார்ப்போம்'' என்ற கொள்கையை முதலில் கடைப்பிடித்தது.

மாணவ இயக்கப் பிரதிநிதிகள் பெரும்பாலும் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். 1960 பிற்பகுதியில் முதன் முதலாக விவசாய இளைஞர்களுக்கும் நகரப்புற இளைஞர்களுக்குமிடையில் முதன் முதல் முரண்பாடுகள் தோன்றின. இதனால் இவ்விரு குழுக்களுக்கிடையில் 'பிளவுகள்' ஏற்பட்டன.

தேசிய இளைஞர் இயக்கம், தேசிய இயக்கத்துடன் 1960 களின் நடுப்பகுதியில் இணைந்தது. இவ்வியக்கங்களின் இணைப்பு தொழிலாளர், விவசாயிகள் மாணவர், தேசிய புத்திஜீவிகள் ஆகியோரை ஒன்று படுத்தியது. இதன் முக்கிய பணி தேசியவாதத்தை வளர்ப்பதும் ஏகாதிபத்திய மானிய முறைச் சக்திகளுக்கெதிராக தேசிய ரீதியில் எதிர்ப்பதுமாகும் இவ்விணைப்பு நாட்டின் சகல தேசிய இயக்கங்களையும் ஒன்றிணைத்தது. சட்டபூர்வ மக்கள் கட்சியை உருவாக்கி தேர்தலில் போட்டியிடவைத்தது. இருந்தும் இந்த ஒற்றுமை நிர்வாக முரண்பாடுகளாலும் தேதியவாதிகளுக்கும் முற்போக்கு வாதிகளுக்குமிடையில் ஏற்பட்டகருத்து மோதல்களாலும் பிணக்குகள் ஏற்பட்டுக் குழப்பமடைந்தன.

தனிப்பட்ட காரணங்களும் நிறுவன ரீதியான காரணங்களும் இம் முரண்பாடுகளுக்கு காரணிகளாக இருந்தனவேயன்றி தத்துவார்த்த அரசியல் காரணிகள் இதற்கு அடிப்படையாக அமையவில்லை என்பது ஒரு கசப்பான, ஆனால் வலுவான உண்மையாகும்.

பிலிப்பைன்ஸ் நாட்டு முற்போக்குச் சக்திகள் தம்மிடையே ஏற்பட்ட பிரிவும் பிளவும் தமது வெற்றியையும் நோக்கையும் போக்கையும் பாதிக்குமென்பதை இன்றுமே உணரவில்லை.

(இடைச்செருகல்)

பல உள்ளூர் பெற்றோர் தமது பிள்ளைகளை இந்த தேசியமாணவ இயக்கத்தினின்றும் வெளியே இழுத்தனர். இவ்வியக்கமும் தமது பல அங்கத்தவர்களை பழிவாங்கும் நோக்குடன் நீக்கித் தம்மைப் பலவீனப் படுத்தியுள்ளது. அண்மையில் நடந்த மாணவர் பேரவைத் தேர்தல் இவ்வியக்கத்தை மேலும் இரண்டாகப் பிரித்தது.

இப்பிரிவுகள் மாணவர் தேசிய இயக்கத்தை முற்றாக ஒழித்துவிடும் என்ற அச்சம் இப்போது எழுந்துள்ளது. இத்தேசிய இயக்கத்திற்கு எதிராக வந்த பிற அணிகளில் மாணவ அங்கத்துவம் பெருகி வருவதுடன் இதன் அங்கத்துவம் அருகிவருவதும் அச்சத்தை வலுப்படுத்துகின்றது.

எது எப்படியிருப்பினும் இவை அனைத்தும் ஏகாதிபத்திய மானியமுறை அடக்குமுறைகளுக்கும் நவீன காலனித்துவத்துக்கு மெதிராகக் குரல் கொடுப்பதில் ஒன்றுபட்டு நிற்றல் பெருமைக்குரியதேயாயினும் தமது ஒற்றுமையின்மையும் அவ்வொற்றுமையின்மைக்கு அடிப்படையான காரணிகளான தனிப்பட்ட காரணிகளும் கசப்பையும் மனவெறுப்பையும் தொடர்ந்து தருவது கவலைக்குரியதாகும். ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கிறிஸ்டோபர்லோக் / ஆங்கிலக் கவிஞர்**

**நன்றி:- சோஷலிசக் கவிதைகள்**

# எதிரியை அறிந்துகொள்

அவனுக்காக நீ உழைக்கும் வரை
உன் நிறத்தைப் பற்றி அவன் கவலைப்படமாட்டான்!
ஆனால் ... நீ கவலைப்படுவாய்!

அவனுக்காக நீ சம்பாதிக்கும் வரையில்
உன் சம்பாத்தியம் பற்றி அவனுக்கு கவலையில்லை!
ஆனால்.... உனக்கு உண்டு.

அவனுக்கு—ஒரு மாளிகையே
சொந்தமாக இருக்கும் வரையில்,
நீ ஏதோ ஒரு கட்டிடத்தின்
முதல் அறையில் வசிப்பது பற்றி
அவன் நினைப்பதில்லை!
ஆனால் . நீ நினைக்கிறாய்!

அவனுக்கு எதிராக - நீ
போராடாத வரையில்
உன்னை எழுத அனுமதிப்பான்!
நீயும் எழுதுவாய்!

அவன்-
மனிதாபிமானத்தை வானளாவப் புகழ்வான்
'அவன் மனதுக்கு தெரியும்;
மக்களை விட
இயந்திரங்களின் விலை அதிகம்'
பேச்சு வார்த்தைக்கு சென்றுபார்
அவன் சிரிப்பான்:
சிரித்துக் கொண்டு
உன்னைத் தோற்கடிப்பான்
அவனுற்குச் சவால் விட்டுப்பார்
உன்னைக் கொன்று விடுவான்.

தன்னுடைய உடைமைகளை
இழக்க வேண்டிய நிலைமை வந்தால்
உலகையே அழித்துவிடுவான்.
எனவே—
இப்போது-

''மூலதனத்தை அழி''
ஆனால் ...
உங்களைச் சுதந்திரப்படுத்திக்கொள்ள
விரையும் போதே,
ஒரு பொதுவுடைமை நாட்டை
நிர்மாணித்துக் கொள்ள விரையும் போதே
உங்களுக்குள்ளே பதுங்கியிருக்கும்
பகைவனை மறந்து விடாதீர்கள் ★